# வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 221
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 4 . ரஜபு 18 ஞாயிற்றுக்கிழமை (20-9-70)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




## கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கருத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

''பொருளாதாரத் துறையில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும். லாபத்தையும், லாபப் பங்கீடுகளையும், மூலதனத்தையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவது தடைசெய்யப்படவேண்டும். இறக்குமதி வர்த்தகத்தை அரசாங்கமே நடத்தவேண்டும். அந்நிய ஏஜன்ஸி உறவுகளும், அந்நிய ஏகபோக நிறுவனங்களும் மத்திய மொத்த வியாபாரமும் தேசிய மயமாக்கப்படவேண்டும்.''

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டத்தில் தேர்தலின் பின் தோன்றிய நிலைமை பற்றி ஆராயப்பட்டபின் பத்திரிகைகளுக்கு, வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஐக்கிய முன்னணித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களை அமுல் நடத்துவது மட்டுமன்றி, அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்கள் பெரும் ஏகபோக முதலாளித்துவ நிறுவனங்கள், லேக்ஹவுஸ் ஆகியவற்றைத் தேச உடைமையாக்குவது போன்ற இதர நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்று கோரி ஒரு மக்கள் இயக்கம் கிளர்ந்தெழுந்துள்ளதை முன்னிட்டுப் பிற்போக்குச் சக்திகள் தங்களின் ஸ்தாபிதமான நிலையின்மீது தொடுக்கும் தாக்குதலைத் தள்ளிப்போடுவதற்குத் தீவிர முயற்சிகள் செய்துவருவது தெளிவு.

அதே சமயத்தில் பிற்போக்குச் சக்திகள் புதிய அரசாங்கத்தின்மீது பல முனைகளிலிருந்து தாக்குதல்களைத் தொடுக்க முயன்று வருகின்றன என்பதையும் மத்தியக் கமிட்டி சுட்டிக்காட்டுகிறது.

அத்தகைய முனைகளில் ஒன்று 'சேகுவேரா இயக்கம்' என்று கூறப்படும் அதிசூரத்தனமான இடதுசாரிக் கோஷ்டிகளுக்கு பிற்போக்குச் சக்திகளும், ஏகபோகப் பத்திரிகைகளும் அரசியல் பொருளாதார உதவிகளை வழங்கிவருவதாகும்.

முழு முற்போக்கு இயக்கமும் சேர்ந்து இந்த உபாயத்தை முறியடிக்க வேண்டிய அவசியத்தை மத்திய கமிட்டி வலியுறுத்துகிறது.

அதிசூர இடதுசாரிக் கோஷ்டிகளின் சீர்குலைவு உபாயங்களுக்கு எதிரான போராட்டத்தை அரசியல் ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் அம்பலப்படுத்துவதன் மூலம் நடத்த வேண்டும்.

பிற்போக்குச் சக்திகளின் பிரதான முயற்சிகள் பொருளாதாரத் துறையில் தங்களின் முதலாளித்துவ நலன்களுக்கு ஆதிக்கம் பெற்றுள்ள நிலைகளுக்கும் எதிராக ஐக்கியமுன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதைத் தடுப்பதேயாகும் என்பதை மத்திய கமிட்டி சுட்டிக்காட்டுகிறது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடுமையான கஷ்டங்களை எதிர்நோக்கி இருந்தாலுங்கூட அதன் மூன்றுமாத ஆட்சிக்காலத்தில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு உறுதியான அநேக நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, வியட்னும் ஜனநாயகக் குடியரசு, கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு, தென்வியட்னும் தற்காலிக புரட்சிகர அரசாங்கம் ஆகியவற்றுடன் பூரண ராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டன. அத்துடன் இஸ்ரேலுடன் கொண்டிருந்த உறவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன, ஆசியா பவுண்டேஷனையும், அமெரிக்கச் சாந்தி சேனையையும் இலங்கையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்வரையில் புதியதொரு சுதந்திர அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்காக ஓர் அரசியல் நிர்ணயசபை அமைக்கப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட கூப்பன் அரிசியின்

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். ஆஸ்பத்திரி நடவடிக்கைகள் யாவும் தமிழில் நடக்கவேண்டும்

### சந்நிதி உற்சவம்

## இ.போ.சபைக்கு 2 தினங்களில் ரூ. 48 ஆயிரம் வசூல்

உடுப்பிட்டி, சனி

தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலய தேர், தீர்த்தத்திருவிழா நாட்களில் விசேஷ பஸ் சேவை நடாத்தியதின் பயனைப் பருத்தித்துறை இ. போ. ச. பணியகத்தினர் 47,738 ரூபா 56 சதத்தை வசூல் செய்துள்ளனர்.

இத்தொகை சென்ற வருடத்தின் வருவாயை விடப் பத்தாயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளதாக இ. போ. ச. உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். இவ்விரு உற்சவ நாட்களிலும் மொத்தம் 66 பஸ் வண்டிகள் சேவைக்கு விடப்பட்டனவென்றும் இவற்றில் ஒரேயொரு பஸ் வண்டிமட்டுமே சேவைநேரத்தில் பழுதடைந்ததாகவும் அவ்வதிகாரி கூறினர்.

இ போ ச பணியகப் பொறியியல் ஊழியர்களின் அயரா முயற்சியும் பஸ்குழுவினரின் கடமையுணர்ச்சியுமே இவ் விசேஷ பஸ் சேவை வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் நடைபெறக் காரணமென்றும் பிரஸ்தாப அதிகாரி பாராட்டினர்.

## ஆஸ்பத்திரி குழு தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ், ஆஸ்பத்திரி நடவக்கைகள் யாவற்றையும் தமிழில் நடத்தவேண்டுமென்ற தீர்மானத்தை ஆஸ்பத்திரிக்குழு ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது ஆஸ்பத்திரிக்குழுத் தலைவர் திரு. மு. வைரமுத்து தலைமையில் நடைபெற்ற குழுவின் விசேஷ கூட்டத்தில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது'

குழுவின் இத்தீர்மானத்தின்படி ஆஸ்பத்திரியில் நோயாளரின் நோய்விபரம், சாப்பாட்டுப் பட்டியல்கள், சிகிச்சைமற்றும்மருந்துவிபரங்கள்யாவற்றையும் டாக்டர்கள் இனி தமிழிலேயே குறிப்பிட வேண்டியிருக்குமாம்.

குழு உறுப்பினர் திரு. எஸ். இராசையா இதற்கான பிரேரணையைக் கூட்டத்தில் பிரேரித்தார். இவரால் இக்குழுக் கூட்டத்தில் பிரேரிப்பதற்கு முன்னறிவித்தல் செய்யப்பட்டதினுவில், மானிப்பாய் ஆஸ்பத்திரிகளை அரசாங்கம் கையேற்க வேண்டுமெனக் [illegible]டுக் கொள்ளும் தீர்மானமும் உட்பட மற்றும் நான்கு தீர்மானங்கள் இன்னெரு கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டன.

## 'திருமுறைப்பண் இருக்க வீண் பாடல்கள் ஏன்?'

தாவடி, சனி

'அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணிவாசகர் ஆகியோர் நமக்களித்துச் சென்ற தமிழ் மறையாகிய திருமுறைப் பண்களும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்களும் இருக்க, வீண் பாடல்களை யெல்லாம் நாம் பாடுவதில் எதுவித [illegible]லனுமில்லை, ஆத்மலாப[illegible]தரும் பாடல்களைப் பாடுவனல் இம்மைக்கும் மறுமைக்கும் பயனுண்டு. இறைவன் இசைப் பிரியன், எனவே இ[illegible]சபாடி வழிபடுவருதிறை இறைவன் திருவரு[illegible]டைக் மிருதங்க வித்வான்களை உருவாக்கிய பெருமையுடையவர் திரு. இராமநாதன்' என்ருர்.

நடன ஆசிரியர் 'கலைச் செல்வன்' ஏ. சுப்பையா, செல்வன் ஜெயன் செல்வக்கு மாருக்கு மாலைசூட்டி ஆசீர்வதித்தார், சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கம் இசை விருந்தளித்தார்.

## 'ஜாதிகருசங்கக்கிளை

## சிங்கள தேர்ச்சி இராது

## உதவித்தொழில் மந்திரி இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு சந்தித்து பேச்சுவார்த்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்தார். இவ்விரு உற் ... டினார்.
சல நாட்களிலும் மொத்தம்

... [illegible] ... தின்படி ஆஸ்பத்திரியில் நோயாளரின் நோய்விபரம், சாப்பாட்டுப் பட்டியல்கள், சிகிச்சைமற்றும்மருந்துவிபர

... [illegible] ... வும் உட்பட மற்றும்நான்கு தீர்மானங்கள் இன்னொரு கூட்டத்திற்கு ஒத்திவைக்கப்பட்டன.

... மில்லை, ஆத்மலாப[illegible]தரும் பாடல்களைப் பாடுவதால் இம்மைக்கும் மறுமைக்கும் பயனுண்டு. இறைவன் இசைப் பிரியன், எனவே இசைபாடி வழிபடுவ[illegible]தினை இறைவன் திருவரு[illegible]டைக்கும்.

என்றிவ்வாறு, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் நடைபெற்ற ஜெயன் செல்வக்குமாரின் மிருதங்க அரங்கேற்றத்திற்கு தலைமை வகித்துரையாற்றிய ஆயுள்வேத வைத்தியர் திரு. சி. பொன்னம்பலம் கூறினார்.

மிருதங்க வித்வான் சங்கீத பூஷணம் ஏ. எஸ். இராமநாதனுக்கு மாலை சூட்டிக் கௌரவித்து திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில்:

'சுமார் 20 ஆண்டுகள் யாழ்ப்பாணத்திலே இசைப்பணி புரிந்து நல்ல சிறந்த ... லிங்கம் இசை விருந்தளித்தார்.

---

# 'ஜாதிகுருசங்கக்கிளை கண்டனம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஸ்ரீலங்கா ஜாதிகுரு சங்கக்கிளைகளின் கமிட்டிக் கூட்டம் திரு வ கிருஷ்ண பிள்ளை தலைமையில் கூடி கல்வித்துறையில் தற்போது நடைபெறும் மாற்றங்களைப் பற்றி நீண்டநேரம் ஆராய்ந்தது. வட இலங்கை இன்னமும் ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக ஒரு சுமுகமான நிலை ஏற்படவில்லையென கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்த விஷயங்களில் வடமாநில கல்வி அதிபதியின் போக்கை கண்டித்து பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

சிலதொகுதிகளில் ஆசிரிய ஆலோசனைச் சபைகள்என்ற போர்வையில் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் தமக்கு ஆதரவளிக்காத ஆசிரியர்களைப் பாதிக்கும் நோக்கத்துடன் தமது ஆதரவாளர்களான ஆசிரியர்களைக் கொண்டு கூட்டப்பட்ட கூட்டங்களைக் கண்டிப்பதுடன் வட மாநிலக் கல்வி அதிபதி பங்குபற்றியதையும் எமதுசபை வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேலும் இக் கூட்டத்தில் வடமாநில கல்வி அதிபதியின்கீழ் இயங்கும் ஆசிரிய இடமாற்றச்சபைக்கு ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கத்தின் வடகிளையின் சார்பில் அதன் செயலாளர் திரு எம் குமாரசாமி பிரதிநிதியாகத தெரிவுசெய்யப்பட்டார்.

---

## சென்ற ஆண்டு

# சிறந்த படம் அடிமைப்பெண் சிவாஜி சிறந்த நடிகர்

சென்னை, செப்.19

சென்ற ஆண்டு வெளிவந்த சினிமாப் படங்களுள் எம், ஜி, ஆரினால் தயாரிக்கப்பட்ட அடிமைப்பெண் தமிழகஅரசின் சிறந்த படத்துக்கான முதற் பரிசைப் பெறுகிறது. சிறந்த நடிகருக்கான பரிசை தெய்வமகன் படத்தில் நடித்த சிவாஜிகணேசன் பெறுகிறார்.

தமிழக அரசினால் நியமிக்கப்பட்ட டாக்டர் மு. வரதராசன் தலைமையிலான குழுவே மேற்கண்ட தெரிவை நடத்தியது' அக்குழுவினால் தெரிந்தெடுக்கப்பட்டு தமிழக அரசின் பரிசில்களைப் பெறுவோரின் விபரம் வருமாறு:

சிறந்த நடிகை சௌகார் ஜானகி (இரு கோடுகள்). சிறந்த வசனகர்த்தா சொர்ணம் (நம்நாடு) சிறந்த டைரக்டர்: ப. நீலகண்டன் (மாட்டுக்காரவேலன்) சிறந்த பின்னணிப் பாடகர் பாலசுப்பிரமணியம் (அடிமைப்பெண், சாந்திநிலையம்) பாடகி: கே. பி. சுந்தராம்பாள் (துணைவன்)

சிறந்த குழந்தை நடிகையாக பேபிராணி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

---

# டெடிகம தேர்தல் மனு செலவுடன் தள்ளுபடி

கோட்டை, சனி

டெடிகம தேர்தல் ஆட்சேப மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

முன்னாள் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவின் தெரிவை ஆட்சேபித்து தாக்கல்செய்த ஆட்சேபமனுவை நீதியரசர் திரு ஜி. ரி. சமரவிக்கிரமா நேற்று தள்ளுபடி செய்துள்ளார். எதிர்தரப்பு வழக்கறிஞரின் பூர்வாங்க ஆட்சேபங்களை நீதியரசர் ஏற்றுக்கொண்டு இத்தீர்ப்பை அளித்தார்.

மேற்படிஆட்சேபமனுவை டெடிகமவில் திரு டட்லி சேனநாயக்காவுடன் ஐக்கிய முன்னணி சார்பில் போட்டியிட்ட வறக்காபொலையைச் சேர்ந்த எச். பி விஜயவர்த்தன தாக்கல் செய்திருந்தார் இவரை திரு. டட்லி சேனநாயக்காவுக்கு செலவுப்பணமாக 1050 ரூபா கொடுக்குமாறும் நீதிபதி கட்டளையிட்டுள்ளார்.

முறைதவறி செல்வாக்கைப் பிரயோகித்ததாக முன்னாள் பிரதமரின் தெரிவை மனுதார் ஆட்சேபித்திருந்தார்.

இந்தத்தேர்தல்மனு சமர்ப்பித்தமுறை தேர்தல் சட்டத்துக்கு உகந்தமுறையில் தாக்கல் செய்யப்படவில்லையென்று எதிர்தரப்பு வழக்கறிஞர் வாதாடினார்.

(சி. பி. ஏ)

---

# 'காசநோய் பரம்பரை வியாதியல்ல'

உடுவில், சனி

''இலங்கையில் தீவிரமாகப் பரவிவரும் நோய்களுள் காசரோகமும் ஒன்று இது மனிதகுலத்திலிருந்து முற்றாக நீக்கப்பட முடியாத ஒருநோய் என்று ஒரு காலத்தில் கருதப்பட்டது. விஞ்ஞான வளர்ச்சியும், புதிய கண்டுபிடிப்புக்களும் தற்காலத்தில் இந்நோயை முற்றும் குணமாக்க உதவுகின்றன். காசரோகம் ஒரு பரம்பரை வியாதியல்ல. இது ஒரு தொற்று வியாதியே. மாற்றக்கூடிய இவ்வியாதியிலிருந்து மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள இந்நோயின் அறிகுறி கண்டவுடன் காசநோய் வைத்தியரிடம் அல்லது ஆஸ்பத்திரியில் சென்று தகுந்த வைத்தியத்தைப் பெறவேண்டும்.''

மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்தில் காசநோய் தடுப்புக்கள் பற்றி உயர்தர வகுப்பு மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய திரு. எஸ் தேவகடாட்சம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வித்தியாலய உப அதிபர் திரு டபிள்யு. ஞானசிகாமணி அன்னப்பா தலைமை வகித்தார்.

---

# 'எல்லோரும் பௌத்தர்களானால் குற்றச் செயல்கள் ஒழியும்'

## — பதில் வீடமைப்பு அமைச்சர்

சொரணதோட்டை, சனி

''இந்நாடு முழுவதும் பௌத்தர்கள் நிறைந்திருந்தார்களானால் நாட்டில் குற்றச் செயல்களோ விபத்துக்களோ ஒரு பொழுதும் ஏற்படாது. நாட்டில் ஏற்படும் விபத்துக்களையும் குற்றச் செயல்களையும் பார்க்குமிடத்து அநேகமானோர் மதத்தில் விருப்பற்றவர்களாக இருப்பதைக் காணலாம்.''

சொரணதோட்டைத் தொகுதியிலுள்ள விகாரை ஒன்றில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்ட பதில் வீடமைப்பு அமைச்சர் திரு பி. எச் பண்டார உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: ''1965ம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் பௌத்த மதத்தை முன்னேற்றுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவுவது எனக் கலாச்சார விவகார இலாகா ஒரு திட்டம் வகுத்திருந்தது. ஆனால் 1965-70ம் ஆண்டுகாலப் பகுதியில் இத்திட்டம் கைவிடப்பட்டது. தற்போது மக்கள் அரசாங்கம் மேற்படி திட்டத்தைத் திரும்பவும் செயற்படுத்தவிருக்கிறது.

தற்போது மதம் மூன்றுமிடத்தையே வகிக்கிறது. நாளாந்தம் அதிகரித்துவரும் குற்றச்செயல்களைக் கவனிக்கும்போது பௌத்தர்களில் அநேகமானோரும் கொலைக் குற்றம் செய்துள்ளனர். ஆதலால் மதத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.''

---

## யாருடையது?

சில ரொக்கத்துடன் லேடீஸ் மணிபேர்ஸ் ஒன்றும் திறப்புக் கோர்வையும் கன்னாதிட்டி வீதியிலுள்ள கே எஸ். நடராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

---

# சிங்கள தேர்ச்சி இராது

சுழிபுரம், சனி

யாழ். மாவட்ட மருந்துக் கலவையாளர் சங்கத்தினர் நியமன அங்கத்தவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் சுகாதார அமைச்சர் திரு. வி. ஆரியதாசாவைச் சந்தித்து தமது குறைந்த பட்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்து நிவாரணம் வழங்குமாறு வேண்டிக்கொண்டனர். எட்டாம் வகுப்பு சிங்களத் தேர்வு நிபந்தனையை நீக்கவேண்டும் என்ற இவர்களது கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.

---

# உதவித்தொழில் மந்திரி இன்று யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உதவித் தொழில் அமைச்சர் எச், எச். சிறிசேன வட பகுதிக்கு முதல் தடவையாக இன்று காலை விஜயம் செய்கின்றார், இன்று காலை 8-30 மணிக்கு பலாலி விமானநிலையத்தில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

காலை 9 மணிக்கு ஊறணியில் டாக்டர் அல்பிரட் மந்திரிக்கு காலைப் போசன விருந்தளிப்பார். காலை 10 மணிக்கு யாழ் தொழில் காரியாலயத்தில் மந்திரி உத்தியோகத்தர்களை சந்திப்பார்.

மாலை 3மணிக்கு தொழிற் சங்கப் பிரதிநிதிகளை மந்திரி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

மாலை 6 மணிக்கு அம்பனில் பொது வரவேற்பு அளிக்கப்படும். தெல்லிப்பளையிலிருந்து மந்திரி ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். அம்பனில் தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு ம. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு நிமால் அபயசேகரா நியமன எம். பி. திரு எம். சி. சுப்பிரமணியம், திரு. அல்பிரட் துரையப்பா, திரு வி. பொன்னம்பலம் ஆகியோர் உரையாற்றுவார்கள்'

(மாவி, நி.

---

# 'தனி இனமாக பிரிந்தால் தமிழினம் அழியும்!' தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி. எச்சரிக்கை

(நமது நிருபர் மு, சின்னத்துரை)

'சிறுபான்மைத் தமிழர்களைத் தனி இனமாகப் பிரித்துப் பிரகடனப் படுத்துவது தமிழினத்தையே அழிக்கும் செயலாகும். சிறுபான்மை மக்களை மனக்கிலேசப் படுத்துவதான தீண்டாமையை முற்றாக நீக்குகின்ற காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இத்தகைய காரியம் ஏற்படுவது விரும்பத்தக்கதல்ல

இவ்வாறு காங்கேசன்துறை ஆட்சிமன்ற உறுப்பினரான திரு எஸ்.ஜே வி. செல்வநாயகம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழரசுக்கட்சி தீண்டாமையை ஒழிப்பதற்காக தொடர்ந்து போராடியது. போராட்டம் இன்னும் நின்றுவிடவில்லை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. வருங்காலத்திலும் அதற்காக முன்னின்று செயலாற்றும்.

நமது கட்சிக்குள்ளே முக்கியமான அங்கத்தவர்களாக சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். அவர்களது உயர்ச்சி நமது உயர்ச்சியாகும். இன்று அவர்களைப் பிரித்துத்தனியினமாக்குவதனால் தமிழினமே பலவீனப்பட்டுவிடும். அதுமட்டுமல்ல தமிழினமே அழிந்துவிடும் செயலிது என்றே கருதுகின்றேன்.

பெரும்பான்மைத் தமிழ் மக்களிடையே மனமாற்றம் உருவாகிவருகின்ற இவ்வேளையில் இந்தப் பிரகடனங்கள் தடையாக அமைந்துவிடக் கூடும் இது சிறுமைப்படுத்தும் செயல் என்றே கருதுகின்றேன்.

தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவது பற்றி குறிப்பிடுகையில் எஸ். ஜே. வி. தெரிவித்தது வருமாறு:

''தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் செயல் தமிழினத்தையே அழிக்குஞ் செயல் என்று கருதுகின்றேன் இதுபற்றித் தமிழ் மக்கள் தீவிரமாகச் சிந்திக்கவேண்டும்.''

---

# ராஜசூரியர் அங்கத்தவர் பதவியை இழந்தார்

கோட்டை, சனி

யாழ். மாகரசபை அங்கத்தவர் பதவியை திரு. ஏ. ஜி. ராஜசூரியர் இழந்தார்! கொழும்பு சுப்ரீம் கோர்ட் இன்று வழங்கிய தீர்ப்பின்படி அவர் மாகநர சபை கோட்டை வட்டார அங்கத்தவர் பதவியையிழக்கிறார்.

திரு. ஏ. ஜி. ராஜசூரியர் புலோப்பளை கிராமசபைத் தலைவராகவும் இருக்கிறார்.

புலோப்பளை கிராமசபை அங்கத்தவராகவும், அதே நேரத்தில் யாழ் மாநகர சபை அங்கத்தவராகவும் இருப்பது செல்லுபடியாகாதெனதீர்ப்பு வழங்கும்படி கோரி யாழ் மாநகரசபை மற்றொரு அங்கத்தவரான திரு. அந்தோனிப்பிள்ளை சுப்பிரீம் கோர்ட்டில் வழக்கொன்றைத் தாக்கல்செய்திருந்தார்.

யாழ். மாநசரசபை அங்கத்தவர் பதவியை அவர் இழக்கிறாரென இன்றுதீர்ப்பு வழங்கப்பட்டது.

---

கேரள தேர்தலில்

# இந்திரா காங்கிரஸுக்கு கூடிய ஸ்தானங்கள்!

திருவனந்தபுரம், செப்.19

கேரளத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கூடுதலான ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது. மொத்தம் 133 இடங்களுக்கு நடைபெற்ற இத் தேர்தலில் மாக்ஸியகம்யூனிஸ்ட் கட்சி 2-வது இடத்தைப் பெற்றுள்ளது, இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை 126 இடங்களின் முடிவுகள் வெளிவந்திருந்தன.

கட்சி நிலவரம் வருமாறு:

இந்திராகாங்கிரஸ் 33, மார்க்ஸீய கம்யூனிஸ்ட் 30, பாரத கம்யூனிஸ்ட் 16. முஸ்லிம் லீக், 12, புரட்சி சோசலிஸ்ட் 6, பிரஜா சோஷலிஸ்ட் 3, சம்யுக்த சோஷலிஸ்ட் 3, கேரள சோஷலிஸ்ட் 2, கேரள காங்கிரஸ் 12, சுயேச்சை9,

---

# கெனமன் மறுப்பு

கோட்டை, சனி

இலங்கை சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து பிரிந்துவிடும் என்று நான் கூறியதாக வெளிவந்த இந்திய பத்திரிகைகளின் செய்தியை அமைச்சர் பீட்டர் கெனமன் இன்று மறுத்தார்.

வீடமைப்பு திட்டங்கள் பற்றி யறிய இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பியுள்ள பீட்டர் கெனமன் பத்திரிகை நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது இந்திய பத்திரிகைகளின் செய்தியை மறுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு: G. C. E. (O/L) வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழி பகுதி I; II புது முறை மாதிரி வினாக்கள் விலை ரூபா 3. ஸ்ரீகாந்தா அச்சகம்-புத்தகசாலை, 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2964

ஆறும், ஏழாந்தர மூன்றும் பருவ பயிற்சிகள் விற்பனையாகின்றன. சுன்னாகம் தனலக்குமி புத்தகசாலையிலும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 2959

உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதால் காங்கேசன்துறை-கீரிமலை வீதியிலுள்ள ''துரை பேக்கரி'' சகலதளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்க. 2950

### மணிபேர்ஸ் யாருடையது?

சுதுமலையில் அத்தாட்சிப் பத்திரத்துடன் ஒரு மணிபேர்ஸ் சங்குவேலியைச் சேர்ந்த என். கந்தசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக்கொள்ளலாம்

யாழ். நகரில்

## இன்று 'ரகர்' போட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். பொலிஸ் விளையாட்டு வார விழாவை முன்னிட்டு, இன்று மாலை யாழ். விளையாட்டரங்கில், மாபெரும் 'ரகர்' விளையாட்டுப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தில் முதல்முறையாக 'ரகர்' போட்டி நடைபெறுவது இதுவேயாகும். இப்போட்டியில், இலங்கையில் 'ரகர்' விளையாட்டில் முடிசூடா மன்னர்களாகத் திகழும் இலங்கை ராணுவக் கோஷ்டியும் — இலங்கை பொலிஸ் கோஷ்டியும் மோதிக்கொள்ளுகின்றன.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ். பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு சிவேந்திரன் செய்துள்ளார். (தே. நி.)

## 'எழுதிய கரம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினரின் 'எழுதிய கரம்' என்னும் இசை உரை நாடகச் சித்திரம் இம்மாதம் 22-ம் திகதி இரவு 7 மணிக்கு இலங்கை வானொலியில் ஒலிபரப்பப்படவிருக்கிறது. நீமரியசேவியர்தயாரித்தஇந்நிகழ்ச்சிக்கு எம். ஜே. தாய் இசையமைத்துள்ளார்.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி 3-ம் கந்தாயம்—1970

1970-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்துக்கான சோலைவரிப் பணம்1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் திகதி புதன்கிழமை பி. ப 3 மணிக்கு முன்னர் மாநகராட்சிமன்ற அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட இக்கால எல்லைக்குப் பின்னர் செலுத்தப்படும் பணத்துடன் 10 வீதம் வெலியாத்துப் பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சல் கட்டளைகள் முதலியன மாநகராட்சிமன்ற ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-9-70-ம் திகதி பி. ப. 3 மணிக்கு முன்னர் மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். இவ்விதம் பணம் அனுப்பும்பொழுது, வீட்டு இலக்கம், தெருப்பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்கள் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-9-70. 2464

## பரியோவான் கல்லூரி

### யாழ்ப்பாணம்:

# பிரவேச விண்ணப்பம்-1971

1. பின்வரும் வகுப்புக்களில் மாத்திரம் இடவசதியுண்டு.
   - முதலாம் வகுப்பு (1-6-65—31-12-65)
   - நாலாம் வகுப்பு (31-12-61)
   - ஆறும் வகுப்பு (31-12-59)
   - க. பொ. த. (சாதாரணம்) முதலாம் வருடம் (31-12-57)
   - க. பொ. த. உயர்தரம் முதலாம் வருடம் (31-12-54)
2. அனுமதி கோரும் மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப் பின் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்பத்திரங்கள் 25-9-70க்கு முன் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கல்லூரிக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொண்ட பத்திரங்களிலேயே விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப் பத்திரத்துக்கு எழுதும் பொழுது முத்திரை ஒட்டிய காகித உறையில் உமது சரியான விலாசத்தையும் எழுதி அதனையும் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

   பிரவேசப் பரீட்சைத் தினம் 13-10-70 (வகுப்புக்கள்
4. 4, 6, 9, 11)
5. பரீட்சையில் அதிக திறமையுடன் சித்தியெய்தும் மாணவர்களுக்குச் சலுகைகள் சில உண்டு.

கே. பூரணம்பிள்ளை
அதிபர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-25 வாத்தியஇசை, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 வீட்டு வைத்தியம், 7-00 ... 7-15

''பொதுமக்கள் — பொலிஸ் நல்லுறவு வளர ...

# வருடந்தோறும் பொலிஸார் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டும்''

## 'ஈழநாடு' ஆதரவு பொலிஸ் விளையாட்டு விழாவில் யாழ். மேயர் உரை

— நமது விளையாட்டு நிருபர் 'தேவா' —

யாழ்ப்பாணம், ஞாயிறு ''மக்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கு விளையாட்டுப் போட்டிகள் மிகவும் உறுதுணையாக இருக்கின்றன. விளையாட்டு மைதானத்தில் தான் ஒருவர் மேல் மற்றவர் கொண்டுள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஒன்று கூட முடியும். பொலிஸார் பொது மக்களிடையே இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகளை வருடா வருடம் நடத்துவார்களானால், பொது மக்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் உள்ள ஒற்றுமை மேலும் வலுவடைய முடியும்''

இவ்வாறு, யாழ். பொலிஸ் விளையாட்டு வார விழாவை முன்னிட்டு, கடந்த இரு வாரங்களாக 'ஈழநாடு' ஆதரவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதி யாட்டங்களுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, யாழ். நகர முதல்வர் திரு ரி. எஸ். துரைராசா கூறினார்.

### வேம்படி மகளிர் சாம்பியன்

வேம்படி மகளிர் கல்லூரிக்கும், இளவாலை கொன்வென்ட் வீராங்கனைகளுக்குமிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் கோஷ்டி வெற்றி பெற்று, சாம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இப்போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை கடும் போட்டியாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது. போட்டியின் ஆரம்பத்தில், வேம்படி கோஷ்டியே முதலில் அடுத்தடுத்து நாலு புள்ளிகளைப் பெற்றது இதன்பின் இளவாலைக் கோஷ்டியினர் மிகவேகமாக விளையாடி ஐந்து புள்ளிகளைப் பெற்றனர். இளவாலைக் கோஷ்டியின் வீராங்கனைகளின் விளையாட்டு பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியாகக் காணப்பட்டது. இவர்கள் மின்னல் வேகத்தில் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பந்தை பரிமாறிக் கொண்டு புள்ளிகளைப் பெறும் ஒவ்வொரு கட்டமும், பார்வையாளரை திகைப்பில் ஆழ்த்தியது. இக் கோஷ்டியில் செல்வி நளின் மரியநாயகம் தூரத்தில் நின்று பந்தை வலையினுள் போடுவதில் மிகவும் கைதேர்ந்தவராகக் காணப்பட்டார்.

இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் தலா 8-8 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

இடைவேளையின் பின் வேம்படி மகளிர் கோஷ்டியினர் வேகமாகவே விளையாடி புள்ளிகளைச் சேகரித்தனர். இவர்களுக்கு பல தடவைகள் மத்தியஸ்தரினால் புள்ளிகளை பெறுவதற்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களை தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டதினால், இவர்கள் இப்போட்டியில் வெற்றி பெறமுடிந்தது. வேம்படி மகளிர் கோஷ்டியில் செல்வி வாமிதிலகாவின் ஆட்டம் மிகவும் சிறப்புற்று விளங்கியது.

போட்டியின் முடிவில் வேம்படி மகளிர் கோஷ்டியினர் 13—9 புள்ளிகள் வித்தியாசத்தால் எதிர்க் கோஷ்டியைத் தோற்கடித்து சாம்பியனானார்கள்.

இப் போட்டிக்கு செல்வி வைத்திலிங்கமும், திருமதி குகததாசனும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

இப் போட்டிக்கு முன், யாழ்ப்பாணம் ஆங்கில கொன்வென்ட் கோஷ்டிக்கும் கனகரட்ணம் மத்தியமகா வித்தியாலயக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மூன்றாவது இடத்துக்கான போட்டியில் யாழ். கொன்வென்ட் 18—11 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

### கோப்பாய் சாம்பியன்

கோப்பாய் விளையாட்டுக் கழகத்திற்கும், சென்றலைய்ஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் கோப்பாய் விளையாட்டுக் கழகம் சாம்பியனாக வந்தது.

மேற்படி இரு கோஷ்டியினருக்குமிடையில் நடைபெற்ற கடுமையான போட்டி இறுதிவரை ரசிப்பாகவே இருந்தது.

இரு கோஷ்டியினரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணமே இருந்தனர். இடைவேளையின் போது கோப்பாய் கோஷ்டியினர் 18-8 புள்ளிகள் வித்தியாசத்தால் முன்னணியில் திகழ்ந்தார்கள்.

இடைவேளையின் பின் சென்றலைய்ஸ் கோஷ்டியினர் பாராட்டக் கூடிய விதத்தில் விளையாடி கூடிய புள்ளிகளைப் பெற்று முன்னணி வகித்தார்கள். இக் கோஷ்டியின் வீரர் அருங்குணத்தின் விளையாட்டு, ரசிகர்களை மிகவும் கவரக் கூடிய விதத்தில் அமைந்திருந்தது. ஆட்ட இறுதியின் போது கோப்பாய் கோஷ்டியினர் மிகதந்திரமான முறையில்விளையாடி 27—26 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றி பெற்று, சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டிக்கு திருவாளர்கள் செல்வராசாவும், விஜயரட்ணமும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

### ராணுவம் வெற்றி

ராணுவக் கோஷ்டிக்கும், வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற, 'செற்-அப்' கரபந்தாட்டப்போட்டியில், ராணுவம் மிகஇலகுவாக வெற்றிபெற்று சம்பியன் கேடயத்தைப் பெற்றது.

மேற்படி இரு கோஷ்டிகளுக்குமிடையில் நடைபெற்ற, மூன்று ஆட்டங்களில், இரண்டாவது நடைபெற்ற ஆட்டம் மிகரசிப்பாக இருந்தது. ஆனாலும் மூன்று ஆட்டங்களிலும், ராணுவக்கோஷ்டி முறையே 14—4, 14—10, 14—05 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது. ராணுவக் கோஷ்டி வீரர்களான ரி. எல். ஆர் பெரேரா கே பி வீரசிங்கி ஆகியோரின் மின்னல் அடிகள். எதிர்க் கோஷ்டியினரையும், ரசிகப்பெரும் கூட்டத்தையும் திகைப்பில் ஆழ்த்தின, வல்வெட்டித்துறைக் கோஷ்டியில் வீரர் சிகாமணியின் ஆட்டம் சிறப்பாக இருந்தது.

### நீர்வேலி வெற்றி

நீர்வேலி யுனைட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற 'ஓவர்-கேம்' கரபந்தாட்டப்போட்டியில். நீர்வேலிக் கோஷ்டி வெற்றிபெற்று சாம்பியன் கிண்ணத்தைப் பெற்றது.

இப்போட்டியின். முதல் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் கழகம் 14 12 புள்ளிகளால் வெற்றிபெற்றது. இதன்பின் நடைபெற்ற இரு ஆட்டங்களிலும், நீர்வேலி யுனைட்டட் கழகம் 14—8, 14 8 புள்ளிகள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

இரு கரபந்தாட்டப்போட்டிகளுக்கும், திரு சீவரட்ணம், மத்தியஸ்தராகவும், திரு எம் டி சம்பிராசா உதவி மத்தியஸ்தராகவும் கடமையாற்றினார்கள்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற எல்லாக் கோஷ்டிகளுக்கும், மேயர் திரு ரி எஸ் துரைராசா பரிசில்களை வழங்கினார். (தே. நி.)

## இணுவில் இந்து வெற்றி

உடுவில், சனி பலாலி இராணுவ கரபந்தாட்டக் கோஷ்டிக்கும் இணுவில் இந்து விளையாட்டுக்கழக விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான ஒரு கரபந்தாட்டப் போட்டியில் 3 - 2 ஆட்டங்களால் இணுவில் இந்து கோஷ்டி வெற்றியீட்டியது.

இணுவில் கோஷ்டி வீரர்கள் செ. இலகுநாதன் செ. அரியரத்தினம், இராணுவ கோஷ்டி வீரர்கள் ஜெயக்கொடி இ. ஆர். கிறிஸ்தோபர் ஆகியோரின் ஆட்டம் திறமையாக இருந்தது.

இணுவில் மத்திய சந்தை மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. நா. பதஞ்சலி மத்தியஸ்தம் வகித்தார்.

இருபக்க கோஷ்டியினருக்கும் அன்று இரவு உடுவில் கிராமசபைத் தலைவர் திரு எஸ், முத்துலிங்கம் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தார்.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

### இறைச்சிக் கடை குத்தகை—1971

1. யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் கட்டப்பட்டு ... பெரியகடை ... எண்ணுள்ள கடைகளில் ... 12, 13, 14, 18 ஆட்டிறைச்சி விற்பதற்கும், ... கடைகளில் ...

## இன்றைய பலன்

# 'ஒற்றுமைக்காக உழைக்க வேண்டும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4, 4, 6, 9, 11)

5, பரீட்சையில் அதிக திறமையுடன் சித்தியெய்தும் மாணவர்களுக்குச் சலுகைகள் சில உண்டு.


கே. பூரணம்பிள்ளை
அதிபர்.

பரியோவான் கல்லூரி,
5—9—70. 2438


ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — பத்மினி — நாகேஷ்
ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
நடித்த
**எதிர்காலம்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ
ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ்
நடித்த
**பூவா தலையா**

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஒவியம் . . .


ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
**துலாபாரம்**
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)


மாலை 4-55 சங்கமம், 5-00 பிறந்தநினைவாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-25 வாத்தியஇசை, 6-30 விவசாயநிகழ்ச்சி, 6-45 வீட்டுவைத்தியம், 7-00 வயலின், 7-15 பாட்டு, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப் பிரசங்கம், 10-30 செய்தித்தொகுப்பு.

## வெற்றிக் கிண்ணம்

மாவிட்டபுரம், சனி

வசாவிளான் திடப்புலம் சித்ர கலா மன்றத்தின் விளையாட்டுப் போட்டியில் 4 விளையாட்டுக்களில் முதலிடத்தைத்தட்டிக்கொண்ட மு. பூபாலு என்ற வீரர் மேற்படி மன்றம் வழங்கிய வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.


ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர்.- சரோஜாதேவி
நடித்த
**திருடாதே**

இன்று மட்டும்
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம்.ஜி.ஆர். — ஈ.வி சரோஜா
நடித்த
**என் தங்கை**

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
பிரேம்நசிர் - ஷீலா - சாரதா
நடித்த
**துலாபாரம்**
(மலையாளம்)

MANOHARA
Jaffna
Daily: 4 45, 7 & 9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
Edward G. Robinson
in
GRAND SLAM
(Scope color)

REGAL
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p.m.
Poya, Prepoya 4 Shows
JASON AND THE ARGONUTS


## இறைச்சிக் கடை குத்தகை—1971

1. யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் கட்டப்பட்டு வாடகைக்குக் கொடுக்கப்படும் பெரியகடையிலுள்ள 2, 4, 7 ஆகிய எண்ணுள்ள கடைகளில் ஆட்டிறைச்சி விற்பதற்கும், 12, 13, 14, 18 ஆகிய எண்களைக் கொண்ட கடைகளில் கருவாடு விற்பதற்கும், சின்னக்கடையிலுள்ள 4, 6 ஆகிய எண் கொண்ட கடைகளில் மாட்டிறைச்சி விற்பதற்கும் 1-1-1971 தொடக்கம் 31-12-1971 வரைக்கும் குத்தகைக்குக் கொடுக்கப்படவிருக்கின்றன. எந்தெந்த நோக்கங்களுக்கு வழங்கப்பட்டனவோ அவை தவிர்ந்த பிற நோக்கங்களுக்குக் குறித்த கடைகளை உபயோகிக்கப்படாது.
2. மேற்படி கடைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால் 1-10-1970-ம் திகதி பி. ப. 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விகள் யாழ்ப்பாண மாநகர அலுவலகத்திலிருந்து பெறக்கூடிய விதித்த கேள்விப்பத்திரங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல்வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் 30-9-1970-ம் திகதி புதன் கிழமை பி. ப. 3-00 மணி வரை வழங்கப்படும். கேள்விப்பத்திரம் ஒன்றின் விலை ரூ. 5/-. அதற்குரிய பிணைப்பணம் ரூ. 25/-.
4. 1971-ம் ஆண்டிற்கு ஆட்டிறைச்சி—மாட்டிறைச்சிக் கடைகளின் மாத வாடகை ரூ. 60/- எனவும், கருவாட்டுக் கடையின் மாத வாடகை ரூ. 40/- எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.
5. ஒருவர் ஒரு கடைக்கே விண்ணப்பிக்கலாம். தற்பொழுது இறைச்சிக் கடைகள் அல்லது கருவாட்டுச் கடைகள் வைத்திருப்போருக்கு கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.
6. ஒவ்வொரு மாதத்தின் வாடகையும், அடுத்தமாதம் 10-ம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டும். செலுத்தத் தவறின் எதுவித அறிவித்தலுமின்றி அவர் உடனடியாகக் கடையிலிருந்துவெளியேற்றப்படுவார்.
7. கேள்வி அனுப்புவோர் மாதா மாதம் செலுத்துகின்ற வாடகைப் பணத்தை விட 1971-ம் ஆண்டிற்கு உரிமைப் பணமாக எவ்வளவு செலுத்த முடியுமென்று தெரிவிக்கவேண்டும்.
8. தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் மூன்றுமாத வாடகைப் பணத்தையும், உரிமைப்பணத்தையும், மாநகர அலுவலகத்திலிருந்து அறிவித்தல் கிடைத்த மூன்று நாட்களுக்குள் செலுத்தல்வேண்டும். அப்படிச் செலுத்தத் தவறின் குத்தகை நிராகரிக்கப்படும்.
9. ஆட்டிறைச்சிக் கடை அல்லது மாட்டிறைச்சிக் கடைக்குக் குத்தகை எடுத்தவர்கள் வாடகைப் பணம், உரிமைப் பணம் ஆகியவற்றைச் செலுத்துவதுடன், இறைச்சி விற்பனவுக்கான உத்தரவுச் சீட்டுக் கட்டணம் ரூ. 85/- ஐயும் செலுத்தவேண்டும்.
10 1971-ம் ஆண்டு புதிய மாதிரிச் சந்தை கட்டவேண்டியிருந்தால், பெரியகடையிலுள்ள இறைச்சி - கருவாட்டுக் கடைகளுக்கு மாநகராட்சி மன்றம் தற்காலிக இட வசதி செய்து கொடுக்கும். இடமாற்றத்தில் ஏற்படும் செலவுகள் குத்தகைக்காரர்களையே சார்ந்தது.
11. 1971-ம் ஆண்டில் எப்பொழுதாயினும் மாநகராட்சி மன்றத்தின் ஒரு மாத கால முன்னறிவித்தலின் பேரில் இறைச்சி/கருவாட்டுக் கடைகளின் குத்தகைக்காரர்கள் இடைக்காலக் கடைகளுக்குப் போகத் தயாராக இருக்கவேண்டும். அத்துடன் மாநகராட்சி மன்றத்துடன் ஓர் உடன்படிக்கையையும் எழுதிக்கொள்ளவேண்டும்.
12. இது சம்பந்தமான இதர விபரங்களை அறிய விரும்புவோர் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் அல்லது நேரில் விண்ணப்பித்து அறிந்து கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம், 18-9-1970. 2463

...னை வகித்தார்கள். இக்

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 4-ம்திகதி
(20-9-70)

மேஷம்- பழைய நினைவுகள் உங்களைக் கவலையில் ஆழ்த்தும், நம்பிக்கையின் மூலம் பொருள் விரயத்திற்கும் இடமேற்பட முடியும்.

ரிஷபம்- இன்னலின் பின்னலால் இதய பாரம் ஏற்படும், சிறு விடயங்களுக்குக் கூட குறைகேட்க நேரிடும் நாவடக்கம் நன்று.

மிதுனம்- குடும்பத்தில் அமைதிநிலவும் சிலர் வாழ்க்கையில் காதல் பிரச்னைகளுக்கு இடமுண்டு, நல்ல நாள்.

கடகம்- ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள், பூமிப் பிணக்குகளால் கலகம் தோன்றக் கூடும் பொறுமை நன்று.

சிம்மம்- செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், பொறியியலாளர்களுக்கு இன்று பொன்னான தினம்.

கன்னி- கல்வித்துறையில் நல்ல திருப்பம் உருவாகும், ஆசிரியப் பணியில் ஈடுபடுபவர்களுக்குச் சிறப்பான நாள்

துலாம்- முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும் ஆயுத பீடைக்கு இடமுண்டு அவதானம் வேண்டும்.

விருட்சிகம் கலைஞர்களுக்குப் புதிய சிந்தனைகள் உருவாகும், குடும்பத்தில் உறவு முறைகள் சுமுகமாக இருக்கும்.

தனுசு- சிறு தவறுகளுக்கு இடமுண்டு. சிலருக்கு உஷ்ணம் சம்பந்தமான ரோகமும் தென்படும்.

மகரம்- குருவின் ஆசியுடன் குறிக்கோளில் வெற்றி காண்பதற்கு இடமுண்டு. யாத்திரைப் பிரியமும் ஏற்படும்.

கும்பம்- தொழில் புரியுமிடத்தில் மேலிடத்து ஆதரவு கிடைக்கும். சிலருக்கு தொழில் மாற்றமும் கிடைப்பதற்கு இடமுண்டு.

மீனம்- இலட்சியப் பாதையை நோக்கிப் பயணம் ஆரம்பமாகும். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும் தரமான நாள்

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

# 'ஒற்றுமைக்காக உழைக்க வேண்டும்'

பூநகரி, சனி

'மனக்கவலையைப் போக்கி உறுதியையும், உற்சாகத்தையும் தரவல்லது விளையாட்டுத்துறை. கிளிநொச்சித் தேர்தல் தொகுதியிலே வாழும் மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்ட கிளிநொச்சி விளையாட்டுக்கழகம் கரைச்சிப் பகுதியிலுள்ள கழகங்களை மட்டும் கருத்திற் கொள்ளாமல் கிளிநொச்சித் தேர்தல் தொகுதிக்குள் இருக்கும் நான்கு காரியாதிகாரி பிரிவுகளிலுமுள்ள விளையாட்டுக் கழகங்களையும் ஒன்று சேர்க்க வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி விளையாட்டுக்கழகத்தினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சித்தொகுதி எம். பி. திரு. வி ஆனந்தசங்கரி பேசுகையில் கூறினர். கழகத்தின் 8-வது ஆண்டு விழாவாக ஹெட்றிகோ மைதானத்தில் இவ்விளையாட்டு விழா நடைபெற்றது.

வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சிப் பட்டினசபைத்தலைவர் திரு. ஏ. முருகேசு பேசுகையில் தெரிவித்ததாவது:

''விளையாட்டில் வெற்றி கண்டவர்களைப் பாராட்டுவதிலும் பார்க்க தோல்வி கண்டவர்களையே பாராட்ட வேண்டும். தோல்வியே வெற்றிக்கு அறிகுறி. இன்று தோல்விகண்டவர்கள் என்றுவது ஒருநாள் வெற்றி காணத்தான் செய்வார்கள்.''

கிளிநொச்சிக் காரியாதிகாரியும் விழாவில் கலந்து கொண்டார்.

(பூந-ஆனையிறவு நிரு)


"கராட்டே"
உங்கள் எதிரிகளிடமிருந்து உங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமா! இன்றே எமது தற்காப்பு பயிற்சி வகுப்பில் சேருங்கள். விபரங்களுக்கு:
School of Self Defence,
M. S. S. T.
Sangarapillai Building.
95/3, Stanley Road,
Jaffna.

அடிக்கு ரூ. 15-00
வீதத்திற்குமேல் சேமியுங்கள்
உள் உறுஞ்சி வெளிவிடும் பைப்புகளுக்கு வளைந்து கொடுக்கும் தன்மையுள்ள அல்கதீன் பாவிப்பதன் மூலம் சேமியுங்கள்.
தண்ணீர் அடிமட்டம் குறைந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்.
நீங்கள் விரும்புவதற்கான காரணங்கள்:—
1. வளைந்துகொடுக்கும் தன்மை—சுருள்போல் வளைந்துகொடுக்கக்கூடிய அல்கதீன் எந்த நீர் பாய்ச்சு முறைக்கும் உகந்தது.
2. சிறந்த செயல்முறை—அமுக்க வேலைகளுக்கும் ஆகர்ண சக்தி உள்ள வேலைகளுக்கும் நோத்தியானது.
3. சிக்கனமானது—அல்கதீன் நீடித்துழைப்பது. மற்றைய தயாரிப்புகளைவிட மிகவும், மிகவும் மலிவானது.
கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்.
தபால் பெட்டி நிர், 352, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேரளத்தேர்தல்: நிஜலிங்கப்பா காங்கிரஸ் படுதோல்வி

## இந்திரா காங்கிரஸ், இந்திய கம். கட்சி கூட்டு அரசு ஏற்பட வாய்ப்பு

திருவனந்தபுரம், செப் 19

**கேரளத்தில் தேர்தல் முடிவுகள் மார்க்ஸீய கம்யூனிஸ்டுகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கின்றன.**

**இந்திரா சார்பு காங்கிரஸ் கட்சியும் மாஸ்கோ சார்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணியும் சேர்ந்துபெருவாரியான இடங்களைக் கைப்பற்றியுள்ளன.**

**இந்திரா சார்பு காங்கிரஸ்கட்சி இம்முறை கேரள சட்டசபையில் அதிகப்படியான இடங்களைக் கைப்பற்றிய கட்சியாக விளங்குகின்றது.**

மார்க்ஸீய கம்யூனிஸ்டுகள் முன்னர் தம்வசம்வைத்திருந்த 19 இடங்களை இழந்திருக்கிறார்கள். முஸ்லிம் லீக் 2 இடங்களையும், மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சி 5 இடங்களையும் இழந்திருக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சி 2 புதிய இடங்களைப்பிடித்திருக்கின்றது.

நிஜலிங்கப்பா தலைமையிலான காங்கிரஸ்கட்சி ஒரு இடத்தையும் பெறாமல் படுதோல்வியடைந்திருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, ஜனசங்கக் கட்சிகளும் ஒரு இடத்தையும் பெறத்தவறிவிட்டன.

இந்திரா சார்பு காங்கிரஸ் கட்சி 32 இடங்களைப்பெற்றுள்ளது. தமது கட்சி தனியாகவே அரசாங்கத்தை அமைக்கும் அல்லது, பாரத கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கம் அமைக்க உதவும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் பிரமுகரான திரு. கே. கே. விஸ்வநாதன் கூறினார்.

திரு. நிஜலிங்கப்பா தமது கட்சி இந்தத்தேர்தலில் படுதோல்வியடைந்திருப்பது குறித்து கருத்து வெளியிடுகையில் இந்த முடிவை தாங்கள் எதிர்பார்க்கவில்லையென்றார்.

மொஸ்கோ சார்பு கம்யூனிஷ்ட் கட்சி 16 இடங்களைக் கைப்பற்றியிருப்பதால் இந்திரா சார்பு காங்கிரஸ் கட்சியும் சேர்ந்த ஸ்திரமான அரசு ஒன்றை அமைக்கக்கூடிய சாத்தியம் ஏற்பட்டுள்ளது. மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி 31 இடங்களைப் பெற்றிருக்கிறது.

முன்னாள் மந்திரிகள் தோல்வியடைந்திருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர்கள், திரு அச்சுதமேனனும் நம்பூதிரிபாட்டும் வெற்றியடைந்திருக்கிறார்கள் முஸ்லிம் லீக் தலைவர் முகம்மதுகோயாவும்வெற்றி பெற்றவர்களில் ஒருவர்.

கேரள காங்கிரஸ்கட்சி 12 இடங்களைக் கைப்பற்றியிருக்கின்றது. கடைசியாக வெளியான தேர்தல் முடிவு மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சிக்கு சார்பாகவிருந்தது.

## வெள்ளத்துக்கு 111 பேர் பலி

புதுடில்லி, செப். 19

உத்தரப் பிரதேசத்தில் வெள்ளத்துக்குப் பலியானவர்களின் தொகை 111 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மூவாயிரம் கிராமங்கள் சேதமடைந்துள்ளன. 25 ஆயிரம் வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. 3 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

— —

## ஒருமாதத்தில் 10000 தொன் உப்பு உற்பத்தி

ஆனையிறவு, சனி

ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப்பகுதி இவ்வருடத்தில் ஒரே மாதத்தில் 10,000 தொன் உப்பை உற்பத்தி செய்துள்ளதென உற்பத்திப் பகுதி பொறுப்பாளர் திரு. ஆர். ஆர் எஸ். நல்லையா தெரிவித்தார்.

கடந்த வருடம் 46,000 தொன் உப்புமட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது. சென்ற வருடத்திலும் பார்க்க இவ்வருடம் அதிகமான அளவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

......

## "அரசியல் நிர்ணயசபையில் இடம் கொடாதது ஏன்?"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"இலங்கையின் மொத்த வருமானத்தில் அறுபத்தைந்து வீதம் மலையக மக்களின் உழைப்பாலேயே கிடைக்கின்றது இலங்கையின் சுபீட்சத்திற்கு அவர்களே காரணமானவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படியிருந்தும் மலையக மக்களுக்கு அரசியல் நிர்ண[illegible] சபையில் இடம் கொடுக்கப்படாதது ஏன்?"

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் - வவுனியாக் கிளைப் பிரதிநிதி திரு. எஸ். ஆர். எம். வேலுச்சாமி, [illegible] அரசியல் அமைப்பு அமைச்சர் திரு. கொல்வின்

## இளைஞரை மோதிவிட்டு லொறி மறைந்ததாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சந்தையில் சாமான் விற்றுவிட்டுச் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரை லொறியொன்று மோதிவிட்டு மாயமாக மறைந்துவிட்டதாம். இச்சம்பவம் கொடிகாமம் சந்தைக்கு அண்மையில் கண்டி வீதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. விபத்தில் படுகாயத்திற்குள்ளான சதாசிவம் இராசேந்திரம் என்ற இளைஞர், ஸ்மரணையற்ற நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் சில பாதசாரிகள் இவரை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தனராம்.

தம்மை மோதிய லொறி, யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றதாக விபத்துக்குள்ளான இளைஞர் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். லொறியைத் தேடும் முயற்சியைச் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (கு.வி.ம)

## தமிழர் நம்பிக்கையை பெறுவதில் அரசு அக்கறை

### புதுடில்லியில் கெனமன் தகவல்

புதுடில்லி செப். 19

இலங்கை கூட்டுமுன்னணி அரசாங்கம் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு பெருமுயற்சி எடுத்து வருகின்றது. புதிய அரசியல் சட்டத்தை அமைப்பதில் தமிழ் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பைப்பெறவும் முயற்சி எடுக்கப்படுகிறது.

இவ்வாறு இலங்கை வீடமைப்பு மந்திரி திரு. பீட்டர் கெனமன் இங்கு கூறினார்.

புதிய அரசியல் அமைப்பின் கீழ் இலங்கை காமன் வெல்த்தில் இருக்காது என்றும் அவர் கருத்து வெளியிட்டார். சமஷ்டிக்கட்சியின் கோரிக்கைகளுக்கு கூட்டாட்சி எதிரானது என்றாலும், தமிழ் மக்களின் மொழி, தொழில் போன்ற குறைபாடுகளை நீக்குவதற்கு சகல முயற்சியும் எடுக்கப்படும் என்றும் அவர் நிருபர்களிடம் கூறினார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பாரம்பரிய நேசஉறவுகள் சிறு பிரச்னைகளால் முறிந்துபோக முடியாதுஎன்றும் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் அமுலாவதில் ஏற்பட்டுள்ளசிறுமுரண்பாடுகளை நீக்குவதற்கு இருதரப்பு பேச்சுவார்த்தைகள் அவசியமென்றும் அவர் வற்புறுத்தினார்.

இலங்கை 3,00,000 பேருக்கு பிரஜாவுரிமை கொடுக்க ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் 6,00,000 பேர் பிரஜாவுரிமைக்கு மனு செய்திருக்கிறார்கள். இந்தியா 5,25,000 பேருக்கு பிரஜாவுரிமை வழங்க ஒப்புக்கொண்டபோதிலும் இதுவரை 400,000 பேரேபதிவு செய்துகொண்டுள்ளார்கள். இலங்கை 8,952 பேருக்கு பிரஜாவுமை கொடுத்துள்ள அதேநேரம் இந்திய பிரஜாவுரிமை பெற்று 15,000பேர் மட்டுமேஇந்தியாவுக்குத்திரும்பியிருக்கிறார்கள் ஒப்பந்த விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படவில்லையென்றார் திரு கெனமன். இந்தியாவுக்குத் திரும்பிய அனேகர் மீண்டும் இலங்கைக்குத் திரும்பியிருப்பதனால் இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படுவதில் மந்தப் ஏற்பட்டிருக்கிறது என்றார்.

## 'கண்டக்டருக்குப் பதில் கடிதங்கொடுத்திருக்கிறேன்'

### குமுளமுனை பஸ்கண்டக்டர் கொலை வழக்கில் மாணவி சாட்சியம்

முல்லைத்தீவு, சனி

பஸ்கண்டக்டர் துரைராசா தந்த கடிதங்களுக்குத் தாம் பதிலகடிதங்கள் கொடுத்ததாகவும் அவருக்குக் கடிதங்கள் எழுதியதும் அவருடன் பழகியதும் திருமணம் செய்வதற்காகவென்றும் குமுளமுனை பஸ் கண்டக்டர் துரைராசா கொலை வழக்கில் சாட்சியமளித்த கோகிலாதேவி என்னும் மாணவி கூறினார்.

பலரையும் பரபரப்புக்குள்ளாக்கிய முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் கொலை வழக்கு மீண்டும் முல்லைத்தீவு நீதிபதி திரு. எம். பீ. ஜி. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது இவ்வழக்கில் இந்த வருடம் ஆனி மாதம் 8-ம் திகதி முல்லைத்தீவு குமுளமுனை பஸ்ஸில் கண்டக்டராகக்கடமையாற்றிய துரைராசா என்பவரைக் கொலை செய்ததாக குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் தியாகராசா வேலுப்பிள்ளை இரத்தின சிங்கம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. அட்வகேட்அரசுவால்டனின் உதவியுடனும் புரக்டர் எஸ். ஸ்ரீதரனின் அனுசரணையுடன் ஆஜரானர். வவுனியாபொலீஸ் இன்பெக்டர் திரு. டயஸ் வழக்கைநடாத்தினர்.

இவ்விசாரணையில் முதலாவதாக சாட்சியமளிக்க பொலீசாரால் அழைக்கப்பட்டவர் கோகிலாதேவி என்னும் இளம் பெண்ணாகும் இவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

நான் குமுளமுனையைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை என்பவரின் மகள் வயது 18 முள்ளியவளையில் கல்விகற்று வருகின்றேன் நான் தினமும் காலையில் பஸ்ஸில்சென்று பாடசாலை முடிந்ததும் மாலையில் பஸ்ஸில்வீடுதிரும்புவதுவழக்கம் இவ்வருடம் மாசிமாதத்தில் காலஞ்சென்ற துரைராசாவை பஸ்ஸில் கண்டேன். அவரிடம் பணம் கொடுத்து ரிக்கற்றைப் பெறுவதைவிட அவருடன் கதைத்துமிருக்கிறேன். அவர் எனக்குக் கடிதங்கள் தந்தார். நானும் பதில் கடிதங்கள் கொடுத்தேன். நான் அவருக்குக் கடிதங்கள்எழுதியதும்அவருடன் பழகியதும் திருமணம் செய்துகொள்ளவே.

நான் 5-6-70ல் துரைராசாவுக்கு (காலஞ் சென்றவருக்கு) கடிதம் எழுதினேன். ஆனால் அன்று பிற்பகல் திருஞானசோதி என்பவர் என்னிடம் எச்சம்பவத்தைப் பற்றியும் கூறவில்லை. பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் கோகிலாதேவி கூறினார்

கேள்வி:- உமக்குத் துரைராசாவின் மரணம் பற்றி எப்போது தெரியவந்தது?

பதில்:- 9-6-70 காலை பொலிசார் மூலம் அறிந்தேன். அவர்கள் எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்கள்.

மேற்காஸிய நெருக்கடி

## ஜோர்டானில் தலையிட்டால் மற்றநாடுகளில் பூசல் ஏற்படும்

### அமெரிக்காவுக்கு ரஷ்யா எச்சரிக்கை

கெய்ரோ, செப். 19

ஜோர்டானில் அரபுக் கொமாண்டோக்களுக்கும் மன்னர் ஹூசேனின் ராணுவ அரசுக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல்களில் வெளியார் தலையிட்டால் மற்ற நாடுகளில் பெரும் பூசல்களுக்கு இடம் ஏற்படும்என்று சோவியத் யூனியன் எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

அமெரிக்காவும் பிரிட்டனும் ஜோர்டான் நெருக்கடிகளில் தலையிடக்கூடும் என்று செய்திகள் அடிபடுவதைத் தொடர்ந்து சோவியத் யூனியன் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மாக அழைத்துச் செல்வதற்காகவே முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் போர்க் கப்பல்கள் இப்பகுதியில் நிறுத்தப்பட்டிருப்பதின் நோக்கம் குறித்து ஊர்ஜிதமான அறிவித்தல் எதுவும் கொடுக்கப்படவில்லை.

ஜோர்டானில் இப்பொழுது தெருச் சண்டைகள் நின்றுபோய் விட்டதாகவும் ஆனால் கொமாண்டோக்களின் முகாம்கள் மீது அரசாங்கப் படைகள் கடுமையான தாக்குதல்களை

## இந்திய ஜனாதிபதி திங்களன்று புறப்படுகிறார்

புதுடில்லி, செப், 19

இந்திய ஜனாதிபதி திரு வி. வி. கிரி சோவியத் யூனியன் ஹங்கேரி பல்கேரியா ஆகிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக அடுத்த திங்களன்று புறப்பட்டுச் செல்லவிருக்கின்றார். சோவியத் யூனியனில் 10 நாள் தங்கி டாஸ்கன்ட், மாஸ்கோ போன்ற இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்த

"வெளிநாட்டிலிருந்து

## கலைக் களஞ்சியங்களான சஞ்சிகைகளை வரவேற்கிறோம்"

— வ. பொ.

யாழ்ப்பாணம், ஞாயிறு

"மண்வளத்தைப் பிரதிபலிக்கக் கூடிய நம்நாட்டு இலக்கியங்களை வளர்ப்பத[illegible]கும், நம்நாட்டு இலக்கியங்களை விநியோகிக்கும் சந்தைகளை உருவாக்க வேண்டும், அப்படிச் சந்தைகளை உருவாக்கும்போது நமது இலக்கியங்கள் இங்கு தாமாக

பிரதியைப் பெற்றுக்கொண்டார்'

திருவாளர்கள் இ. பாலசுப்பிரமணியம், ஆ. கலியாணசுந்தரேசன் ஆகியோருட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் ஜோர்டான் நெருக் கடிகளில் தலையிடக்கூடும் என்று செய்திகள் அடிபடு வதைத் தொடர்ந்து சோவி யத் யூனியன் இந்த எச்சரிக் கையை விடுத்துள்ளது.

மத்தியதரைக் கடலின் கிழக்குப் பகுதியில் பல போர்க் கப்பல்களை அமெ ரிக்கா நகர்த்தியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. அமெரிக்க ஆறுவது கடற் படை மத்தியதரைக் கடல் பகுதியிலேயே இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள் ளது.

அமெரிக்க விமானம் தாங் கிக் கப்பல் ஒன்று ஆயிரம் அமெரிக்க கடற்படையின ருடன் இப்பகுதிக்குநகர்ந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. ஜோர்டானிலுள்ள அமெ ரிக்க பிரஜைகளைப் பத்திர பொழுது தெருச் சண்டை கள் நின்றுபோய் விட்ட தாகவும் ஆனல் கொமாண் டோக்களின் முகாம்கள் மீது அரசாங்கப் படைகள் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் செய் திகள் கூறின.

இதற்கிடையில் ஜோர் டான் விவகாரத்தில் அமெ ரிக்கா தலையிட்டால் அங் குள்ள அமெரிக்கப் பிரஜை களை கொன்றொழிக்கப் போவதாகஅரபுக்கொமாண் டோக்கள் அறிவித்துள் ளன.

அம்மானுக்கும் இதர அரபு நாடுகளுக்குமிடையில் இன்னும் தொடர்புகள் துண் டித்தபடியே இருக்கின்றன.

மன்னர் ஹுசேன் தமது பதவியைத் துறக்க விரும்பு வதாகவும் செய்திகள் கூறு கின்றன.

# ‘நாடு தன்னிறைவு பெற உழையுங்கள்’

மாவிட்டபுரம், சனி

''கூட்டுறவுச் சங்கங்களில் பணத்திற்காக சேவை செய் யாது நாட்டைத் தன்னி றைவு பெறவேண்டும் என்ற ஆவலுடன் நாட்டுக்காக உழைக்கவேண்டும்.''

இவ்வாறு வடபகுதி விளை பொருள் உற்பத்தியாளர் சங்கங்களின் சமாச கருத் தரங்குக்குத் தலைமை வகித் துப் பேசுகையில் சமாசத் தலைவர் திரு. என். ரி. சிவ ஞானம் கூறினார்.

வடபகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்க மனேஜர் களை கூட்டி நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில், ''வருங்காலத்தில் வேலை வாய்ப்புகள் குறையக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே நாளைய சமுதாயத் தின் பெற்றோர்கள் தற் போது விவசாயத்தை நல் லாக முன்னேற்றி வருங் கால சமுதாயத்திடம் இவ் விவசாயத்தை ஒப்படைக்க வேண்டும். இதற்குப் பல நோக்குச்சங்கங்கள்விவசாயி களுக்கு புத்திமதி கூற வேண்டிய கடமையில் உள் ளது'' என்றார்.

வெங்காயம், உருளைக் கிழங்கு உட்படச்சகல பயிர் களையும் தரமுள்ள உரம் இட்டு கிருமிநாசினி தெளி த்துநல்லமுறையில் செய்கை பண்ண விவசாயப் பகுதி யினரின் உதவியையும், ஆலோசனையையும் விவசாயி களுக்கு பெற்று கொடுக்க வேண்டிய கடமைபலநோக் குக்கூட்டுறவுச் சங்கங்களுக் குத் தான் உரியது.

இன்று கூட்டப்பட்டகருத் தரங்கம் பலநோக்கு கூட் டுறவுசங்க முதலாளிகளி டையே ஒரு புத்துணர்ச்சி யையும், புதிய எண்ணத்தை யும் உருவாக்கக்கூடியதாக இருக்கவேண்டும். இதே போல விவசாயம் முன்னேற் றம் கருதிஇன்னும் பலகருத் தரங்குகள் கூட்டப்பட உள் ளது'' என்றார்.

— —

## பாடசாலைக் காணியை விஸ்தரிக்க தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''400 மாணவர்கள் கல்வி கற்கும் வித்தியாசாலையை இரண்டுபரப்புக் காணிக்குள் அமைத்துள்ளமையால் மாணவர்களுக்கு வசதிக் குறைவாக உள்ளது இதனை போதிய விஸ்தீரணமுடைய தாக்க எதிர்காலத்தில் நட வடிக்கை எடுக்கப்படவேண் டும்''.

இவ்வாறு கோரும் தீர் மானம் ஒன்று ஆனைக் கோட்டை ஸ்ரீ பாலசுப்பிர மணியம் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

மேலும்அந்தத் தீர்மானத் தில் பிள்ளைகளுக்கு அவசிய மான குடிதண்ணீர்வசதிமல சலகூட வசதி என்பன இல் லாதிருப்பதையும் சுட்டிக் காட்டி பக்கத்துக் காணியை பள்ளிக்கூடத்துடன் இணை க்கவேண்டுமென்றும்கோரப் பட்டுள்ளது. (கு. வி. ம.)

காக அடுத்த திங்களன்று புறப்பட்டுச் செல்லவிருக் கின்றார். சோவியத் யூனி யனில் 10 நாள் தங்கி டாஸ்கன்ட், மாஸ்சோ போன்ற இடங்களில் சுற் றுப் பிரயாணம் செய்த பின் திரு கிரி அடுத்த 1ம் திகதி பல்கேரியாவுக்குப் பயணமாவார். அங் கிருந்து ஹங்கேரிக்குப் போய் பின்ன அக்டோ பர் 8-ம் திகதி இந்தியா வுக்குத் திரும்புவார்.

## மக்கள் கமிட்டியின் நோக்கம்

செங்கடகலை, சனி

''கிராமப் புறங்களோடு நெருங்கிய தொடர்புகொள் ளும் நோக்கத்துடனேயே அரசாங்கம் மக்கள் கமிட் டிகளை நிறுவவிருக்கிறது. இவற்றால் கிராமப்புறங்கள் அரசாங்கத்திடமிருந்து எந் தளவுக்கு நன்மைபெறமுடி யுமோ அந்தளவுக்குப் பெற வசதியாக இருக்கும்.''

ஹமல்கலையில் தமக்களிக் கப்பட்ட வரவேற்பின் போது உரையாற்றிய கைத் தொழில் விஞ்ஞான விவ கார அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''எதிர்காலத்தில் இந்த மக் கள் கமிட்டிகள் கிராமங் களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளையில் இக்கமிட்டிகள், லஞ்ச ஊழல்களையும், கறுப்புச் சந்தைக்காரர்களையும் ஒழி த்துவிடும்.

திருவாளர்கள் டி. பி. ரணதுங்கா, தயாரத்ன வடுகமன்கவா, எம். ஜய திலகா, டி. பி. ஜயக்கொடி உட்படப் பலர் இவ்வைப வத்தில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

— —

## எம். பி.க்கு வரவேற்பு

முல்லைத்தீவு, சனி

வவுனியாத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எக்ஸ் எம். செல்லத் தம்புவுக்கு முல்லைத்தீவு வட்டுவாகல் மக்களால் பிர மாண்டமான முறையில் நேற்று முன்தினம் வரவேற் புபசாரம் நடாத்தப்பட் டது. இவ்வரவேற்பில் முல் லைத்தீவுப் பட்டணசபைத் தலைவர் திரு. ம. சூ. வஸ் தியாம்பிள்ளையும் பல பிர முகர்களும் கலந்து உரை யாற்றினர்.

கொடுக்கப்படாதது ஏன்?''

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் - வவுனியாக் கிளைப் பிரதிநிதி திரு. எஸ். ஆர். எம். வி. வேலுச் சாமி, தேசியல் அமைப்பு அமைச்சர் திரு. கொல்வின் ஆர் டி சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ள தந்தியில் மேற் கண்டவாறு கேட்டுள்ளார்.

— —

## பெரியபுராண விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கப் பெரியபுராண விழா இன்று ஞாயிற்றுக்கிழமை சங்கநிலை யத்தில் நடைபெற விருக் கிறது. விழாவுக்கு திரு. வி. பாலசுப்பிரமணியம், தலைமைவகிப்பார். பெரிய புராண ஏட்டுச்சுவடி ஊர் வலமாக அரங்கிற்கு எடுத் துச்செல்லப்படும். திருவா ளர்கள் மா. கனகேந்திரன், நா. முத்தையா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உட்படப் பலர் பேசுவார்கள்.

(கு. வி. ம)

— —

## புதிய கட்டிடத் திறப்பு விழா

சுழிபுரம், சனி

சில்லாலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் புதிய கட் டிடத் திறப்பு விழா சங்கத் தலைவர் திரு. நீ. ஜேம்ஸ் தலைமையில் நடைபெற்றது கூட்டுறவு உதவி ஆணையா ளர் திரு. வி கனகசபை புதிய கட்டிடத்தைத்திறந்து வைத்தார். திருவாளர்கள் எம். வைரமுத்து, வண எஸ். யோசவ், றேக்குசைப்பிள்ளை மா. நடராசா உட்பட மற் றும் பலர் வைபவத்தில் கல ந்துகொண்டு உரையாற்றி னர்.

— —

## தொகுதி அபிவிருத்தியில் எம். பி.

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி உடுப்பிட்டித் தொகுதியின் அபிவிருத்திக்கெனப் பல திட்டங்களை உருவாக்கப் புள்ளி விபரங்கள் சேகரி த்து வருவதாகத் தெரிய வருகிறது. இதற்கு முன்னோ டியாகப்பல பகுதிகளிலும் கிளைகளை நிறுவி ஆலோ சனைகள் செய்து வருகின் றார்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''மண்வளத்தைப் பிரதி பலிக்கக் கூடிய நம்நாட்டு இலக்கியங்களை வளர்ப்பதற் கும், நம்நாட்டு இலக்கிய கர்த்தாக்களுக்கு விமோச னம் கொடுப்பதற்குமாகவே நாம் பிறநாட்டுச் சஞ்சிகைக ளைத் தடுப்பதற்கு விரும்பி னோம். அதே நேரத்தில் கலைக்களஞ்சியங்களாக உள்ள வெளி நாட்டுச் சஞ் சிகைகளை வரவேற்கின் றோம்''

இவ்வாறு இலங்கைசாகித் திய மண்டல உறுப்பினரும் கூட்டுறவு மொத்த விற்ப னவு ஸ்தாபனத்தின் டைரக் டர்களில் ஒருவருமான திரு வி. பொன்னம்பலம் நேற்று யாழ்ப்பாணம் மலாயன்கபே மேல்மாடியில் நடைபெற்ற 'நாவேந்தன்' மலர்வெளி யீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் தெரி வித்தார்.

''ஒருசமையம் தாகூரைச் சந்தித்த மகாத்மாஜி 'நீங் கள் வானில்பறக்கும் பற வைகளை மட்டும் பாடிக் கொண்டிருக்காமல் மண் ணில் கால்புதைந்து நிற்கும் தரித்திர நாராயணர்களைப் பற்றியும் பாடவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார் தாகூர் காந்திஜியின் கரு த்தை ஏற்றுக் கொண்டு இலக்கியங்களை ஆக்கினார். இதனால் பாரதத்தில் நல்ல தேசியத் தலைவர்கள் உருவா கினார்கள்'' என திரு. வ பொன்னம்பலம் கூறினார்.

வட்டுக்கோட்டை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு ஆ. தியாகராசா பேசுகையில் கூறியதாவது:-

''நல்ல இசைக் கலைஞர் களை இந்தநாட்டில் வராமல் தடுப்பதினால் நம் நாட்டின் இசைத்திறமையும் குன்றி விடக் கூடும். கலைகளுக்கு எல்லைவகுக்கக் கூடாது. இத னால் நமது கருத்துக்களு க்கு விருத்தி குறைவாகி விடும். இலக்கிய கர்த்தாக்கள் சமுதாயத் தைப்பீதிப்படுத்தாமல் மக்க ளிடையே எழுச்சி ஏற்படுத் தக் கூடிய இலக்கியங்களைச் சிருஷ்டிக்கவேண்டும்.''

உடுவில் ஆட்சிமன்றஉறுப் பினர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட் டவை:-

''வெளிநாட்டு இலக்கிய சஞ்சிகைளை அரசியல் கார ணமாகவே இறக்குமதி செய் வதைச் சிலர் தடுக்க முயல் கின்றனர். பாரதியாரின் பாடல் ஒன்றை வானொலி யில் ஒலிபரப்பாமல் தடை செய்தமைக்கு இந்த நோக் கமேகாரணம், இலக்கியங் களை விநியோகிக்கும் சந்தை களை உருவாக்க வேண்டும், அப்படிச் சந்தைகளை உரு வாக்கும்போது நமது இலக் கியங்கள் இங்கு தாமாக விருத்தியுறும்''.

டில்கா உரிமையாளர் திரு எஸ். கதிரவேற்பிள்ளை முதற் பிரதியைப் பெற்றுக்கொண் டார்'

திருவாளர்கள் இ. பால சுப்பிரமணியம், ஆ. கலியா ணசுந்தரேசன் ஆகியோருட் பட மற்றும்சிலரும் பேசினார் கள். (கு. வி. ம.)

— வ. பொ.

தேயிலை ஏற்றுமதி

# அரசுபொறுப்பேற்காததற்கு இதுதான் காரணம்'

நெல்லியடி, சனி

''இறக்குமதியை அரசாங் கம் பொறுப்பேற்பதன் மூலமே முதலாளி வர்க்க த்தை நசுக்கமுடியும் இலங் கையில் றப்பர்ஏற்றுமதியை அரசாங்கம் ஏற்கலாம் ஆனல் தேயிலைஏற்றுமதியை அரசாங்கம் ஏற்றால் இங்கே உள்ள தேயிலைக்கம்பனி களில் உள்ள முதலாளிகளின் தரகர்மாருக்கு அயல்நாடு களிலும் தேயிலைக் கம்பனி கள் இருப்பதால் எமது தேயிலையை வெளிநாடுகளி லும் பெற்றுக்கொள்ள மறுப்பார்கள், அதனாலேயே தேயிலை ஏற்றுமதியை அரசு பொறுப்பேற்கப் பின்னிற் கிறது.''

இவ்வாறு மந்திகையில் நட ந்த சோஷலிசகருத்தரங்கில் கலந்துரையாற்றிய மக்கள் வங்கித்தலைவர் ஹெக்டர் அபய்வர்த்தன கூறினார்,

மேலும் அவர்பேசுகையில் கூறியதாவது:

இன்றைய சூழ்நிலையில் முதலாளிவர்க்கம், விவசாயிகள், ஏழைப் பாட்டாளிவர்க்கம் என மூவகையினராகப் சமுதாய த்தைப் பிரிக்கலாம்.

தொழிலாளர்களே இந் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். அவர்களு டைய புரட்சி என்ற உணர் ச்சியினால்தான் நாடுசோஷ லிசபாதையை அடைய முடி யும். எமது அரசாங்கம் பொதுத்திட்டம்ஒன்றைவகு க்கின்றது: நெடுங்காலமாக நாம் எந்தெந்தக்கொள்கை களைக் கொண்டிருந்தோமோ அதை நிறைவேற்றுவதே கூட்டணியின் முக்கியநோக் கமாகும். நாட்டிலே மக்க ளின்சங்கங்களாக இயங்கிக் கொண்டிருக்கும் பலநோக் குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் பலதொழில் நிறுவனங்களை நிறுவமுடி யும். பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்ன தொ ழில்தான் செய்யவேண்டு மென்ற கட்டுப்பாடுகள் கிடையாது. கூட்டுறவுவங் கள் மூலம் பின்தங்கிய கிரா மங்களையும் முன்னேற்றவும் ஏழை விவசாயிகள் தொழி லாளர்களுடையநலன்களைப் பேணும்முகமாகவும்மேலும் சேமிப்பு இயக்கங்களை உரு வாக்குதல் வேண்டும் சீன, கியூபா போன்ற நாடுகளி டையே புரட்சியின் மூலமே தொழிலாளர் விடுதலையடை ந்தார்கள். நாட்டுக்கேற்ற மாதிரி சமுதாயத்திற்கேற்ற மாதிரி புரட்சியை ஏற்படு த்த வேண்டும். இப்போது மக்கள் மத்தியில் 'புரட்சி' எண்ணம் சுடர்விட்டு மிளிர் கிறது, பல கூட்டுத்தாபனங் களில் எங்கள் அரசாங்கம் வந்ததும் உயர்நிர்வாகிகள் தாங்களாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள், இன்று மக் கள் கையில் அரசாங்கம் செயல்படுகிறது' கருத்தரங் கிற்கு புறக்டர் கணபதிப் பிள்ளை தலைமைவகித்தார்.

ராசாவின் மரணம் பற்றி எப்போது தெரியவந்தது?

பதில்:- 9-6-70 காலை பொலிசார் மூலம் அறிந் தேன். அவர்கள் எனது வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்கள்.

கேள்வி:- நீர் பொலிசா ருக்குக் கொடுத்த வாக்கு மூலத்தில் ஏப்ரல் மாதம் மூன்றாவது கிழமையளவில் துரைராசா குழுளமுனைக்கு நவரத்தினம் வீட்டுக்கு எனது திருமண விஷயமா கப் பேச வந்தாரெனக் கூறி னீரா?

பதில்:-இல்லை.

கே: நீர் 5-6-70ல் துரை ராசாவுக்கு எழுதிய கடிதத் தில் சில உறவினர்கள் அடிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## பெயர்ப்பலகை நடப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னகம் பட்டினசபைக் குச் சொந்தமான சேர் பொன். இராமநாதன் வீதி யிலிருந்து உடுவிலுக்குப் பிரிந்து செல்லும் வீதிக்கு கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பே அம்பலவாணர் வீதி எனப் பெயர் சூட்டிய போதும் திரு. ந. க. அம் பலவாணர் மரணமாகும் வரை இவ் வீதிக் குப் பெயர் பலகைப் நடப்படாதிருந்தது. அவ ரது மரணத்தின் பின்னரே இக்குறை நிவர்த்திக்கப்பட் டுள்ளது. திரு. ந. க. அம் பலவாணரின் தொண்டு களை கௌரவிக்குமுகமாக இவ்வீதிக்குஅவரது பெயரை பட்டணசபை வழங்கியது.

தற்பொழுது அச்சிலிருக்கின்றது!

'ஈழநாடு'
தினக்குறிப்பு
1971

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

தினக்குறிப்பு 1971

'ஈழநாடு'

தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தெய்வீக அறிவை புத்தகங்களில் இருந்து கடன்வாங்க முடியாது. அதை நம்மிலேயே உணர வேண்டும். —மகாத்மாகாந்தி.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

...ழுபவருடம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 4-ந் திகதி (20-9-70)


## இலங்கைத் தேயிலை நெருக்கடி

இலங்கைத் தேயிலையின் விலை லண்டன் மார்க்கெட்டில் குறைந்து வருகிறதாம். இதற்குக் காரணம் நமது தேயிலை பகிஷ்கரிக்கப்படுவதுதான் என்றும் இலங்கை அரசாங்க அதிகாரிகளும் தேயிலை வர்த்தகத்தில் ஈடுபட்டவர்களும் உறுதியாகக் கூறுகின்றார்கள்.

லண்டனிலே சென்றஜூலை மாதம் 10-ம் திகதியுடன் முடிவான விற்பனையில் 23 ஆயிரத்து 525 பெட்டிகள், றாத்தல் 56 பென்ஸ் வீதம் விலை போயிருக்கையில் சென்ற ஆகஸ்ட் மாதம் 28-ந் திகதியுடன் முடிவான விற்பனையில் 11 ஆயிரத்து 82 பெட்டிகள் றாத்தல் 46 பென்ஸ் வீதமே விலையாகியுள்ளன, அதாவது சரக்கின் அளவு பாதிக்கும் குறைந்திருக்கையில் விலையும் றாத்தல் ஒன்றுக்கு 10 பென்ஸ் குறைந்துவிட்டது. இதற்குக் காரணம் இலங்கையின் தேயிலை பகிஷ்கரிக்கப்படுவதுதான் என்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள்

இவ்வித நிலை அநேகமாக எதிர் பார்க்கப்பட்டது தான். இஸ்ரேலுடன் அரசியல் உறவுகளை நாம் துண்டித்துக் கொண்டது லண்டனில் பலருக்குப் பிடிக்கவில்லை. லண்டன் தேயிலை ஏலமார்க்கெட்டில் பல யூதர்கள் இருப்பதாகவும் அவர்கள் பழிவாங்கும் நோக்கத்துடன் இலங்கைத் தேயிலையை பகிஷ்கரிப்பதாகவும் சொல்லப்படுகிறது அத்துடன் லுஸாகாவில் கூட்டுச்சேரா நாடுகள் தென்னாபிரிக்காவுடன் எவ்வித வர்த்தகத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாதென்று தீர்மானித்ததால், தென்னாபிரிக்காவுக்கு நாம் இதுவரை அனுப்பி வந்த 3 கோடி றாத்தல் தேயிலையை இனி அனுப்புவதற்கில்லை. நாம் ஏற்றுமதி செய்யும் தேயிலையின் மொத்த அளவு 43 கோடி றாத்தல். இதில் மூன்று கோடி என்பது சிறிதளவே என்றாலும் இன்று மாற்று முறையில் கணிசமான தேயிலையை ஒப்பந்தத்தின்மூலம் வாங்கிக்கொள்ள முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கது. அரபு நாடுகளுக்காகவும் ஆபிரிக்க நாடுகளுக்காகவுமே இலங்கை துணிச்சலுடன் மேற்குறித்த நடவடிக்கையை எடுத்தது ஆகவே அந்நாடுகள் இலங்கையின்பால் விசேஷ நன்றியும் அனுதாபமும் காட்டக்கூடும். குறித்த அந்நாடுகளுக்கு நமது தேயிலையையும் மற்ற பொருள்களையும் ஏற்றுமதி செய்ய அரசாங்கம் விசேஷ முயற்சி செய்யுமென்றே எதிர்பார்க்கலாம்.

லுஸாகா மகாநாட்டில் கலந்து கொண்ட இந்தியாவும் தேயிலை ஏற்றுமதியை அதிகம் செய்வதால், அத்தேயிலைக்கும் வெள்ளை வர்த்தகர்கள் நியாயமான விலை அளிக்காமல் மாலாவி, கென்யா உகண்டா, டான்ஸேனியா முதலிய ஆபிரிக்க நாடுகளிலே வெள்ளைக்காரர் தோட்டங்களிலிருந்தும் தேயிலைக்கு அதிக விலைகொடுத்து ஆதரிக்கக்கூடும்' இந்தப் போட்டி ஏற்கனவே இலங்கை, இந்திய தேயிலையை பாதித்திருக்கின்றது. ஆகவே இவ்விஷயத்தில் இலங்கையும் இந்தியாவும் ஒத்துழைத்து தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கக்கூடிய முயற்சி செய்ய வேண்டும். சென்னை 'ஹிந்து' பத்திரிகை இதுபற்றி எழுதியுள்ள தலையங்கத்தில் 'இந்தியாவும் இலங்கையும் தேயிலையைப் பெரிய அளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகள். இவை இரண்டும் சேர்ந்து விற்பனை விஷயத்தில் ஒத்துழைத்தால் வாங்குபவர்கள் விலைவிஷயமாகச் செய்யும் திருகுதாளங்களையும், திரிசமங்களையும் தவிர்க்கவும் அவர்கள் ஆட்டிவைக்கும்படி ஆடவும் வேண்டிய நிலையிலிருந்து மீளவும் முடியும் இலங்கையும் இந்தியாவும் நீண்டகால நன்மையைக் கருதி என்ன செய்ய வேண்டுமென்பது தெளிவு' என்று குறிப்பிடு

# கலை வளர்ப்பதுவே எமது நோக்கம்

(ரீ. பாக்கியநாயகம், பொதுச் செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட பிரதேச கலாமன்றம்)

**மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தின் கலைவிழா இன்று ஆரம்பமாகி 22-ந் திகதிவரையும் மூன்று தினங்கள் நடைபெறுகின்றது. மட்டக்களப்பு திறந்த வெளி அரங்கிலும் மட்டக்களப்பு நகர மண்டபத்திலும் நடைபெறும் இவ்விழாவில் பாடசாலைகளினதும் கலைமன்றங்களதும் சிறந்தசங்கீத நடனநாடக, நாட்டுக்கூத்து நிகழ்ச்சிகளும் அண்ணாவிமார் மகாநாடு, கவி அரங்கு, இலக்கிய உரை அரங்கு இசைஅரங்கு ஆகியவைகளும் இடம்பெறுகின்றன.**

மட்டக்களப்பு மாவட்டத்திலே கலைகளை வளர்ப்பதிலும் பண்டையக்கலைகளான நாட்டுக்கூத்துப்போன்றவைகளை பேணிக்காப்பதிலும் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச கலாமன்றம் ஆற்றிவரும் சிறந்த சேவைகளை அனைவரும் உணர்ந்துள்ளனர். மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள தமிழ் அறிஞர்களையும். மன்றக் கலைஞர்களையும் அங்கத்தவர்களாகக்கொண்டு இயங்கிவரும் மன்றம், குறுகிய காலத்துக்கிடையில் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை கலை உலகில் சாதித்துள்ளது பற்றி கலைஞர்கள் பலரும் பெருமைப்படலாம். தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தமட்டில், தற்போது இயங்கிவரும் ஒரேயொரு பிரதேச கலாமன்றம் இதுதானென் பதையிட்டு நாம் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவைப் பாராட்ட வேண்டும். கலைகளை வளர்ப்பதில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடுமுள்ள அப்பெரியாரின் முயற்சியினாலேயே பிரதேச கலாமன்றம் புனரமைக்கப்பட்டு கலைகளை வளர்க்க முடிகிறது.

சென்றஆண்டு நடைபெற்றதுபோன்று இம்முறையும் கலைவிழாவொன்றை மூன்று தினங்களுக்கு மன்றம்நடத்த ஏற்பாடுசெய்துள்ளது கலாச்சார அமைச்சர் கலந்து கொள்ளவிருக்கும் இப்பெருவிழாவின்போது, மாவட்டத்திலுள்ள கலைமன்றங்களுக்கிடையே நடத்தப்பட்ட நாடக, நாட்டுக்கூத்துப் போட்டிகளில் பரிசுபெற்ற சிறந்த நிகழ்ச்சிகள் மேடையேற்றப்படவிருக்கின்றன. அத்துடன் கவிஅரங்கு, இலக்கிய உரைஅரங்கு, இசை அரங்கு போன்றவையும் இடம்பெறுகின்றன.

கலைவிழாவின் ஓர் அம்சமாக அமையும் அண்ணாவிமார் மகாநாட்டின்போது இம்முறையும் இப்பகுதிகளிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட பதினான்கு பழம்பெரும்அண்ணாவிமார் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரியக் கலைச்சொத்தான நாட்டுக்கூத்தையும் அதைப்பயிற்றும் அண்ணாவிமாரையும் ஆதரிப்பது நமது தலையாய கடமையென்பதை நாம் உணர்ந்துள்ளோம்

திறமை எங்கிருந்தாலும் அதைப்போற்றிக் கௌரவிப்பதுவே மட்டக்களப்பு பிரதேச கலாமன்றத்தின் நோக்கமாகும். இக்கலைவிழாவின் மூலம் ஓர் புதிய உற்சாகம் நம் கலைஞர்கள் மத்தியிலே தோன்றுமாயின் மட்டக்களப்பின் கலைவளர்ச்சிக்கு அது சிறந்த அறிகுறியாகும்.

## அண்ணாவிமார் மாநாடு அரசாங்க அதிபர் செய்தி

மரபோடு ஒட்டிய நாட்டுக் கூத்தினைப் பேணிப் பாதுகாத்துவரும் மட்டக்களப்பில் இரண்டாவது முறையாக இந்த அண்ணாவிமார் மகாநாடுநடைபெறுவது எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

இப்பாரம்பரிய கலையைப் பேணிப் பாதுகாத்துவரும் நமது அண்ணாவிமார்களிற் பலர் சென்ற ஆண்டு கௌரவிக்கப்பட்டார்கள் இம்முறை இன்னும் பலர் கௌரவிக்கப்படவிருக்கிறார்கள். இந்தக் கௌரவம் நமது அண்ணாவிமார்களுக்கு உற்சாகத்தையும் மேன்மேலும் நாடகங்களை மேடையேற்றும் ஆர்வத்தையும் தரும் என்று நம்புகிறோம்.

பண்டைய நாட்களில் மன்னர்கள் கலைஞர்கட்கு பரிசை வழங்கினார்கள். இன்று மக்களின் பிரதிநிதிகளான உள்ளூராட்சி மன்றங்கள் கலைஞர்கட்கு பரிசை வழங்கிக் கௌரவிக்கின்றன.

அண்ணாவிமார்களைக் கௌரவிப்பதில் மட்டக்களப்புப் பிரதேசக் கலா மன்றத்திற்குச் சிறந்த ஆலோசனை வழங்கியகலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கட்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

இதே ஊக்கத்துடன் உள்ளூராட்சித் திணைக்களம் வழிகாட்டியாய் அமைய உள்ளூராட்சி மன்றங்கள் மென்மேலும் கலைத்துறையிலும் பிற துறைகளிலும் உற்சாகத்துடன் பணிபுரிய வேண்டுகிறேன்.

தேவநேசன்-நேசையா
அரசாங்க அதிபர்
மட்டக்களப்பு மாவட்டம்
தலைவர், மட்டக்களப்பு
பிரதேசகலாமன்றம்

## மட்டக்களப்பு கலைவிழா

"மஹாகவி"

தேனும் தயிரும் தெவிட்டாக் கவிசெய்யும்
மீனும் வயலும் பயிரும் மிடுக்கான
ஊராரின் பாடல் ஒலியும் உவப்போடு
சேரும் இளைஞர், முதியர், சிறுவர்கள்
தாளங் களுக்குத் தகுந்தபடி நடந்து
நீள இரவு முழுதும் நிகழ்த்துகிற
கூத்தும் நிறைந்து குளிர்ந்த நிலத்திலே
பார்த்துச் சிலிர்க்கும் படியாய்க் கலை யாவும்
ஒன்று திரட்டித் தொகுத்துத் தருதற்கே
என்று பெரிய விழா வொன்
றெடுக்கின்றோம்.
கோலாட்டம் ஆடும் அவர்கள், கழிக்கம்பு
தாலாட்டுப் பாடல் தருபவர், நாடகங்கள்
ஆடுவோர், ஆட்டி அவற்றை அமைப்பவர்கள்,
நாடு நயக்கும் நறுங்கவிதை கோப்பவர்கள்,
வில்லை அடித்து வியப்புக்கதை சொல்வோர்,
சொல்லை எடுத்துச் சுவையாகப் பேசுபவர்,
நூறு செயல்கள் புரிந்து ஓர் பொதுநாளை
வேறு படுத்தித் திருநாள் விளைக்கின்ற
ஆற்றல் உடைய அரியோர் பொதுவருடன்
நோற்று நிகழ்த்தும் ஒரு நுண்கலையின்
வெற்றி விழா-
மட்டக் களப்பு மணிநகரில் மூன்று நாள்.
எட்டுத் திசையும் இனிக்க எழுகிறது.
நேரிலே வந்து நிகழ்வுகளைக் கண்டு களி
கூரும் என நாம் குழைவோடு
வேண்டுகிறோம்.

## வங்கிகள் தேசியமய..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது கொத்து அரிசியை மீண்டும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களில் அநேகருக்கு அரசியல்-தொழிற்சங்க உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன யூ என். பி. அரசாங்கத்தால் பழிவாங்கப்பட்ட ஊழியர்கள்மீது விதிக்கப்பட்ட தண்டனைகள் நீக்கப்பட்டன.

முற்போக்கு இயக்கம் ஒரு நெருக்கடியான கட்டத்தை இப்பொழுது அடைந்துள்ளதென்பது மத்திய கமிட்டியின் கருத்தாகும். முற்போக்கு இயக்கத்தின் முன்னிலையில் நிதி, பொருளாதார நெருக்கடிகளால் உருவாக்கப்பட்டுள்ள பயங்கரமான பிரச்னைகளை ஏகாதிபத்திய, பெரு முதலாளித்துவ ஏகபோகங்களுக்கு எதிராகத் திருப்பப்படும் தீவிர நடவடிக்கைகளால் மட்டுமே தீர்க்க முடியும்.

இக்காரணங்களை முன்னிட்டு ஐக்கிய முன்னணியின் சகல ஆதரவாளர்களும், ஐக்கிய முன்னணி அரசாங்கமும் தீவிர நடவடிக்கைகளை அமுல் நடத்துவதற்காக ஒன்றுபட்டு திடசங்கற்பத்துடன்பணியாற்ற வேண்டியது அத்தியாவசியமாகும் இந்த நடவடிக்கைகளின் மூலமே இலங்கை மக்கள் தங்களை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளிருந்து மீள முடியும்.

துணி வகைகள், மருந்து வகைகள், உப உணவுப் பொருட்கள், மற்றும் அன்றாடத் தேவைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் ஆகியவற்றின் விலைவாசிகள் குறைக்கப்பட வேண்டும். வேலையில்லாதோருக்கு வேலை வழங்கும் தீவிரத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவேண்டும்.

1970 மே 27-ந் திகதி முற்போக்கு இயக்கம்பெற்ற

# மக்களை அரசியல் வாதிகள் பிரித்தாலும் தெய்வம் ஒன்று சேர்த்துவைக்கிறது

முனீஸ்வரம் தேர்த்திருவிழாவை முதல் முதலாக இம்முறைதான் பார்த்தேன் இலங்கைத் தமிழர், பதி... தமிழர், மலைநாட்டுத்தமிழர் இவர்கள் மட்டுமல்ல சிங்களவர், கிறிஸ்தவர், சோனகர் முதலிய பலஇனத்தவரும் மதத்தவரும் குடும்பம் குடும்பமாகவந்து ...

பட்டினிகிடக்காமல் உணவுப்பிரச்னையைத் தீர்க்கலாம் என்றார், அக்கோவில் அதிகாரி.

0 0 0

சிலமடங்களில் அன்னதானம் நடப்பதைப்பார்த்தேன் ... அதிக... வர்களே தள்ளிக்கொண்டு முன்னதாகச் செல்லமுடி...

அதிகமான உணவை உட்கொள்வதால் ஏற்படும் தீங்கை வற்புறுத்துவதே அக்கட்டுரையின் நோக்கம் இதனால் தான் நோய்களும் அதிகம் வருகின்றன. அதிகமான உணவைச் சாப்பிட்... ...தான் தேகபலத்துடன் ...லாமென்ற தவறான எண்ணத்தால் த...ர் புருஷன் மார்களுக்கு ...

சமூகத்திலே ஒரு பக்கம் சிலர் அதிகமான உணவு உண்டு புளித்த ஏப்பம்விட்டு நோய்வாய்ப்படுகையில், மறுபுறத்தில் உண்ண உணவின்றி, பசி ஏப்பம்விட்டு, பலர் வாடுகின்றார்கள். எல்லாருக்கும் தேவையான அளவு உணவையே இறைவன் உற்பத்தி செய்துதருகிறார். ...

கின்றது. "ஒருவர் உணவை ஒருவர் பறிக்கும் வழக்கம் இனி உண்டோ?" என்று பாடினார் அமரகவி பாரதியார் அவர் மறைந்து பல வருடங்களாகியும் இன்னும் அத்தீயவழக்கம் சமூகத்தில் இருக்கவேசெய்கிறது இதை ஒழித்து "தனிஒருவனுக்கும் உணவில்லை" என்று சொல்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்புவதற்கில்லை. நாம் ஏற்றுமதி செய்யும் தேயிலையின் மொத்த அளவு 43 கோடி ருத்தல். இதில் மூன்று கோடி என்பது சிறிதளவே என்றாலும் இன்று நமது நெருக்கடியான செலாவணி நிலைமையைக் கவனிக்கையில், இதுகுறித்து நாம் அலட்சியம் செய்வதற்கில்லை.

இலங்கையின் பொருளாதாரம் தேயிலை. ஏற்றுமதியையும் அதன் விலையையுமே பெரிதும் பொறுத்துள்ள நிலையில் இந்தப் பகிஷ்கார நடவடிக்கையைச் சமாளிக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பது முக்கிய கேள்வி. நல்லவேளையாக இதுவரை நமது தேயிலையை வாங்காமல் இருந்த சூடான் பண்ட வேண்டிய நிலையிலிருந்து மீளவும் முடியும் இலங்கையும் இந்தியாவும் நீண்டகால நன்மையைக் கருதி என்ன செய்ய வேண்டுமென்பது தெளிவு' என்று குறிப்பிடுகின்றது.

நமது தேயிலையை பகிஷ்கரித்து, நம்மீது பழிவாங்கச் சிலர் முற்பட்டிருக்கையில், இலங்கை கண்மூடித்தனமாக இருக்க முடியாது. நாம் இந்தியாவுடன் 'ஹிந்து' பத்திரிகை கூறுவது போல இவ்விஷயத்தில் ஒத்துழைப்பது நமது பொருளாதாரத்தைக் காத்துக் கொள்ளவும் இந்தப் பகிஷ்கார நெருக்கடியைச்சமாளிக்கவும் வெகுதூரம் உதவ வேண்டும்.

## ஜோர்தான் சண்டை

மேற்காசியாவிலே அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் சமாதானப் பேச்சுக்கள் நடக்கவிருந்த இச்சமயத்தில், ஜோர்தானிலே அராபியர்களுக்குள்ளாகவே உள்நாட்டுச் சண்டை கிளம்பியுள்ளது பெரிய துரதிருஷ்டமாகும். இந்த நிலைமை அரபுகளின் எதிரிகளுக்கே மகிழ்ச்சியும் உதவியும் அளிக்கும் ஆதலால் இந்தச் சண்டையை கூடிய சீக்கிரத்தில் நிறுத்திவிட அரபு நாடுகள் எல்லா முயற்சிகளும் செய்யுமென்று எதிர்பார்ப்பது மிகையல்ல.

இஸ்ரேல் சிறிய நாடாயினும் அதன் பலத்தை அலட்சியம் செய்வதற்கில்லை. மீண்டும் அதற்கு அமெரிக்கா ஆயுதங்களை அளிக்க முன்வந்துள்ளது. அரபு நாடுகள் எல்லாம் ஒற்றுமையாகப் போராடினாலே, அவர்களுக்கு வெற்றி கிடைக்கமுடியும். ஒற்றுமை பலப்படுத்துவதற்குப் பதில் அவர்களிடையே வேற்றுமைகளே அதிகரித்துள்ளன. பாலஸ்தீன விடுதலை கொமாண்டோக்கள் ஈராக், சிரியா இவற்றுக்கு, அமெரிக்காவின் சமாதானமுயற்சிகள் பிடிக்கவில்லை. இவ்விஷயம் பற்றி அரபுநாடுகளுக்குள்ளாகவே கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளது. இப்பேச்சுகளுக்குப் பல பல தடைகள். இதற்கிடையே ஜோர்தான் மன்னரைக் கொன்று அங்கு ஆதிக்கம் பெறவும் பல முயற்சிகள் நடக்கின்றன. நிலைமையை மன்னரால் சமாளிக்க முடியாமல் இராணுவத்திடம் ஆட்சி அதிகாரத்தை அளித்துவிட்டார்.

ஆயுதங்களை யெல்லாம் ஒப்படைக்க வேண்டுமென்று இராணுவத்தினர் போட்ட உத்தரவை பாலஸ்தீன கொமாண்டோக்கள் அலட்சியம் செய்து, பல இடங்களிலும் போருக்கு அரண் செய்து கொண்டனர். இராணுவத்தாருக்கும் கொமாண்டோக்களுக்கும் தலைநகரான அம்மானில் பெரும் மோதல்கள். இருதரப்பினரும் வெற்றி தங்களுக்கே என்று கூறுகின்றனர், நிலைமை குழப்பமாகவுள்ளது. ஜோர்தான் இராணுவம் பலம் வாய்ந்ததுதான். ஆனால் கொமாண்டோக்களுக்கும் ஈராக், சிரியா இவற்றின் ஆதரவும் உள்ளது. இதைத்தவிர புதுசீனத்தின் உதவியும் இருந்து வருவது பகிரங்க ரகசியம். கொமாண்டோக்களின் வானொலி நிலையத்தை எதிப்து மூடியதும் தங்கள் நாட்டிலே அந்த வானொலிக்கு இடமளிப்பதாக ஈராக் முன்வந்தது ஆனால் கொமாண்டோக்கள் அதை ஏற்கவில்லை. ஏனெனில் புதுசீனம் மூன்று வானொலி ''டிரான்ஸ்மீட்டர்'' களை அனுப்பி வைக்க முன்வந்ததால், அவற்றை ஜோர்தான் பிரதேசத்திலேயே அமைத்து தங்கள் பிரசாரத்தை நடத்த அவர்கள் ஏற்பாடுசெய்தார்கள். இதிலிருந்து புதுசீனத்தின் ஆதரவு கொமாண்டோக்களுக்கு எவ்வளவு உள்ளதென்பதை உணரலாம்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் [illegible]-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மிழர், மலைநாட்டுத்தமிழர் இவர்கள் மட்டுமல்ல சிங்களவர், கிறிஸ்தவர். சோனகர் முதலிய பலஇனத்தவரும் மதத்தவரும் குடும்பம் குடும்பமாகவந்து படுகின்றார்கள். மக்களை அரசியல்வாதிகள் பிரிக்கிறார்கள். ஆனால் தெய்வம் மக்கள் குலமனைத்தையும் ஒன்றுபடுத்தும்அதிசயத்தை அங்கு நேரில் காணலாம். தேசிய ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின் அது தெய்வத்தின் மூலம்தான் சுலபமாக ஏற்படமுடியுமென்பதை முனீஸ்வரத்திலும் கண்டேன்.

கதிர்காமத்தில் முருகன் இருந்து மக்களை ஒன்றுபடுத்தும் சக்தியாக விளங்குவது போல், முனீஸ்வரத்திலும் வடிவாம்பிகையும், முனீஸ்வரரும் அருள்செய்கின்றார்கள். இவ்விதம் மக்களை ஒன்றுபடுத்தும் சக்திவாய்ந்த இப்புராதனகோயிலுக்கு பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னர் 32 கிராமங்களை மான்யமாக விட்டிருந்தாராம், அதில் வரும் வரும்படி கோவில் மூலம்அன்ன தானம் முதலிய சமூகப்பணிகளுக்குப்பயன்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்று கோவிலுக்கு அந்தகிராமங்களில்லை. இருந்திருந்தால் கோவில் கணக்கிலேயே வந்தவர்களுக்கெல்லாம் உணவு முதலியவைகளை அளிப்பதுடன், அந்த ஊரில் யாரும்

அமெரிக்கா, பிரிட்டன், ஸ்விட்ஸர்லாந்து இவற்றின் விமானங்களை திசைதிருப்பி ஜோர்தான்பாலைவனத்திற்குக் கொணர்ந்து. பல பிரயாணிகளையும் பிடித்துவைத்துக் கொண்டு மூன்று பெரிய விமானங்களையும் வெடிவைத்து தகர்த்துவிட்டதைப் பார்க்கையில் அவர்கள் எவ்வளவு துணிச்சலுடன் காரியம் செய்கிறார்கள் என்பது தெரியும் இவற்றையெல்லாம் பார்க்கையில், மேற்காசியாவில் சண்டை நின்று அமைதி சீக்கிரத்தில் ஏற்படமுடியுமென்று நம்புவதற்கில்லை. புது சீனத்தின் கை வியட்னமில் மட்டுமல்ல, மேற்காசியாவுக்கும் பரவியிருப்பது தெளிவு. அணுகுண்டு வல்லரசான புதுசீனத்தை ஒதுக்கிவைப்பதை விட்டு அதையும் அங்கீகரித்து, அதன் ஒத்துழைப்பையும் பெற்று ஐ. நா. சபை மூலம் சமாதான முயற்சி செய்வதாயின், இந்தச் சிக்கல் ஒருவிதமாகத்தீர வழிபிறக்கலாம், இன்றேல் இதுவே மூன்றாவது உலக யுத்தமாகக் கிளம்பி விடக் கூடும்.

0 0 0

சிலமடங்களில் அன்னதானம் நடப்பதைப்பார்த்தேன். ஆனால் கூட்டம் அதிகம் உடலில் பலமுள்ளவர்களே தள்ளிக்கொண்டு முன்னதாகச் செல்லமுடியும். வந்தவர்களுக்கெல்லாம் கதிர்காமத்தைப் போல் அன்னதானம் செய்வதாயின், இங்கும் கூட்டம் இன்னும் அதிகமாகவருவதாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. கோவில் திருவிழாக்களில் மகேஸ்வர பூசை அல்லது அன்னதானம்

## ஐயாறன் எழுதிவருவது

தான் முக்கிய அம்சமாகும். அதுவே தமிழரின் விசேஷ பண்பாடு அந்தவழக்கத்தை பல்வேறு காரணங்களால் மறந்து அநேகமாகக் கைவிட்டுவிட்டோம். இப்போது மீண்டும் அந்தவழக்கம் தலைதூக்குவதற்கான நல்ல அறிகுறிகளை அங்கு காணக்கூடியதாகவுள்ளது.

எந்தக் கிராமத்திலும்சரி, நகரத்திலும் சரி யாரும் என்றும் பட்டினிகிடக்காதவாறு அந்தந்தக் கிராமத்திலுமுள்ளவர்கள் கோயில்கள் மூலம் ஏற்பாடு செய்வதாயின், அன்பைப்பெருக்குவதாயின், சமூகமும் நாடும் எவ்வளவோ அமைதியாக முன்னேறமுடியும். இந்தச் சமூகப்பணியை அரசாங்கத்தால் வெற்றிகரமாகச் செய்யமுடியாது, கோவில்களை எல்லாம் சமூகத்தின் உடைமைகளாக்கி, சமூகப் பணிகளை அவற்றின் மூலம் கூடுமானவரைசெய்ய இவ்வளவு தெய்வபக்தியுள்ள இலங்கை, மற்ற நாடுகளுக்கு வழிகாட்டலாமல்லவா?

0 0 0

''உங்கள் கணவன்மார்களைக் கொலைசெய்வது எப்படி?'' என்று ஒரு சஞ்சிகையில் வெளியான தலைப்பைப் பார்த்து திடுக்குற்றேன். அந்தக்கட்டுரையைப் படிக்காமலிருக்க முடியுமா? படித்தபின் விஷயம் புரிந்தது ''அதிகமான உணவுகளைச் சாப்பிடு சாப்பிடு என்று திணியுங்கள். புருஷன் போதும் போதுமென்றாலும் விடாதீர்கள் நெய், வெண்ணெய் முதலிய கொழுப்புச் சத்துள்ள உணவுகளை அதிகம் கொடுங்கள். காப்பி, டீயை அடிக்கடி அளியுங்கள் உங்கள் புருஷன் மார்களை வேறு உலகத்துக்கு அனுப்பிவிட்டு நீங்கள் தனிக்காட்டு ராணிபோல் விடுதலைபெற்று வாழலாம்!'' என்று அக்கட்டுரை தெரிவித்தது.

இதனால் தான் நோய்களும் அதிகம் வருகின்றன. அதிகமான உணவைச் சாப்பிட்டால்தான் தேகபலத்துடன் வழலாமென்ற தவறான எண்ணத்தால் தங்கள் புருஷன்மார்களுக்கு அனேகம் தம்மனைவிமக்கள் அதிக உணவளிக்கின்றனர்.

மறுபுறத்தில் உண்ண உணவின்றி, பசி ஏப்பம்விட்டு, பலர் வாடுகின்றார்கள். எல்லாருக்கும் தேவையான அளவு உணவையே இறைவன் உற்பத்தி செய்துதருகிறார். சிலர் அதிக உணவு உட்கொள்ளுவதால், பலருக்கு அது இல்லாமற்போ

## சங்கானை கிழக்கு பெரியவளவு முருகன்

**கலைமணி க. தெய்வேந்திரம்**

முக்கண்ணன் முதல்வன் மூத்தோன் கணபதிக்கே அப்பன் அருங்கனி கொடுத்ததற்கு ஆண்டியாய் வேடமிகொண்டு அழகுமலை வாசம் செய்த அருள் வள்ளல் முருகப் பெருமானைத் திருவேலா திருக்குமரரா, திருமார்பா, திருத்தணிகை மணவாளா, கலியுகவரதா என்றெல்லாம் அடியார்கள் மட்டும் வேண்டவில்லை அமரரும் வேண்டினர். அழியா உருக்கொண்ட அசுரனை அழித்த ஆறுமுகப் பெருமானின் தத்துவங்களை ஆன்றோர் நமக்கு விளக்கியுள்ளார்கள், திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, கந்தபுராணம், கந்தரனுபூதி கந்தரலங்காரம் போன்ற பாடல்களை அறியாதார் அறியாதாரே.

இத்தகைய பெருமைக்குரிய முருகன் அறங்கொண்ட பக்தகோடிகளின் உரங்கொண்ட நெஞ்சத்தில் கனிந்த பண்ணிசைக்கிரங்கியே சங்கானை கிழக்குப் பெரிய வளவுப் பூம்பதியில் குடியிருக்க மனங்கொண்டு தான்தோன்றி ஈஸ்வரராக எழுந்தருளினார். இது இப்பகுதி மக்களின் தவப்பேறுகும்.

இப்பெருங்குடி மக்களால் பேரிடும்பை போக்கும் பெரியவளவு முருகப்பெருமானுக்குப் பிரதி வருடமும் ஆவணித்திங்கள் உற்சவம் நடைபெறும், கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பமாகும் உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெற்று அடுத்து தீர்த்தோற்சவத்துடனும் பின் பூங்காவனத்துடனும் விழா முடிவடையும். உற்சவங்களில் பூங்காவனமே அதி சிறப்புப்பெற்றதாகும்.

முருகனின் அருள்வேண்டி நிற்கும் அடியார்கள் விழாக் காலங்களில் அங்கப்பிரதட்சனை செய்தும், பாற்காவடி புஷ்பக்காவடி தேர்க்காவடி ஆட்டக்காவடி எடுத்தும் பெண்களும் சிறுர்களும் அடி அழிப்பு கற்பூரச்சட்டி ஆராத்திகள் செய்தும் தம் இஷ்டசித்திகளைப் பெறுவர்.

'உருவாய் அருள்வாய், உளதாய் இலதாய், மருவாய் மலராய், மணியாய் ஒளியாய், கருவாய் உயிராய், கதியாய் விதியாய், குருவாய், வருவாய், குகனே அருள்வாய்' என அடியவர்கள் வேண்டியதை வேண்டியாங்கு கொடுத்தருள ஆறுபடை வீடு கொண்ட அருள் குமரன் 'கயம்பிடர் மறைந்திடு எளிதினில் வளர்ந்திடு கழனிவள பெரிய வளவில் கருணையொடு அமைந்துறையும் அறுமுகக் கடவுளே கண்கண்ட தம்பிரானே' என்று வர்ணிக்கின்றார் அவ்வூர் வீரவாகுப் புலவர் என்பவர்.

இவ்வாலயத்தின் இறுதி உற்சவமான பூங்காவன விழா இன்று நடைபெறுகிறது.

......

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**வருடாந்த பரிசளிப்பு விழா**

**திங்கட்கிழமை 21-9-1970**

பிரதம விருந்தினர்
செனட்டர்
எஸ்.நடேசன் கியூ. ஸி.
செல்வி கே. சரவணமுத்து
அவர்கள் பரிசில்களை வழங்க ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

பெற்றோர், பழையமாணவர்கள், அனுதாபிகள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

2460

## மூதாட்டி மரணம்

எழுதுமட்டுவாள், சனி

முருகன் கோவிலுக்கு பஞ்சதிரவியம் வாங்கச் சென்ற 50 வயது மூதாட்டி கோவில் வாசலில் துடிதுடித்து மரணமான சம்பவம் கைதடியில் நடந்துள்ளது

கைதடி மேற்கைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை என்ற மூதாட்டி கோவிலுக்குச் சென்று மயக்கமுற்று விழுந்ததாகவும், பூசகர் தீர்த்தம் பருக்கியதும் அம்மூதாட்டி மரணமானுரென்றும் கூறப்படுகிறது.

இம்மூதாட்டியின் 17 வயதான பேர்த்தி பாம்பு கடித்து மரணமாகியதும் அதன் அந்தியேஷ்டியன்று மூதாட்டி திடீர் மரணமடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

யார் அவர் மறைந்து பல வருடங்களாகியும் இன்னும் அத்தியவழக்கம் சமூகத்தில் இருக்கவோசெய்கிறதுஇதை ஒழித்து ''தனிஒருவனுக்கும் உணவில்லை'' என்று சொல்லாதபடி நல்லதோர் ஏற்பாட்டை நாம் செய்ய முடியாதா?

## 8 மாதங்களாக மூடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் ஆஸ்பத்திரிவார்ட்டுகளில் நோயாளிகள் படுக்க கட்டில்கள்இல்லாமல் நிலத்தில் படுத்திருக்கும் அதே சமயம் பத்துக்கு மேற்பட்ட அறைகள் கொண்ட கட்டடம் பூர்த்தியாகியும் திறக்கப்படாமலிருக்கிறது.

பத்து அறைகளைக் கொண்ட இக் கட்டடம் கடந்த 8 மாதங்களாகப் பூட்டப்பட்டிருக்கிறது.

கட்டிடத்திற்குள் கட்டில்கள் உபகரணங்கள் தளபாடங்கள் போடப்பட்டிருக்கிறது. இக்கட்டிடத்தை எந்தப் பிரிவுக்கு விடுவதென சௌக்கிய இலாகா முடிவு செய்யாததினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது,

இப்புதிய கட்டடத்தை நோயாளரின் பாவனைக்கு திறந்து விடும்படி பலர் சுகாதார மந்திரியிடம் வற்புறுத்தியிருப்பதாக அறியப்படுகிறது, (கு, வி ம.)

......

## கண்டக்டர் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கக் காத்திருப்பதாக எழுதினீர்?

ப: ஆம்.

கே: 8-6-70 பிற்பகல் நீர் பிரயாணம் செய்த பஸ்ஸில் முதலாவது எதிரி ஏறினார்.

ப: இல்லை.

தொடர்ந்து சாட்சியமளிக்கையில் 8-6-70 அன்று காலஞ்சென்றவரே பஸ்ஸில் கண்டக்டராகக் கடமை செய்தார். நான் பிற்பகல் 5 மணியளவில் பாடசாலையில் இருந்து வீடு திரும்பினேன் என்று சாட்சி கூறினார்.

எதிரி தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தான் கேள்விகள் கேட்பதில்லை என்றார்: அதன் பின் வே. தியாகராசா, ம. சேனாதிராசா, செ. நல்லையா, செ. ஆறுமுகம், க. திருஞானசோதி ஆகியோர் சாட்சியமளித்தனர்

இதன்பின் நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 15-ந் திகதி வரை ஒத்திவைத்து அதுவரை எதிரிகளை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

வேண்டும். வேலையில்லாதோருக்கு வேலை வழங்கும் தீவிரத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவேண்டும்.

1970 மே 27-ந் திகதி முற்போக்கு இயக்கம்பெற்ற வெற்றியைப் பாதுகாத்து முன்னெடுத்துச் செல்வதற்காக உடனடிக் கோரிக்கைகளை நிறைவேற்றும் ஒரு மக்கள் இயக்கம் அவசியமாகும் பொருளாதார நெருக்கடியை அடிப்படையாகவும், நிரந்தரமாகவும் தீர்ப்பதற்கு தேவைப்படும் அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்களை தேசியமயமாக்குதல் வர்த்தகத்தை சோஷலிஸ நாடுகளின்பால் திருப்பிவிடுதல், நாட்டை தொழில்மயமாக்குதல், நிலச் சீர்திருத்தம் செய்தல், அரசாங்க இயந்திரத்தை புனர் அமைத்தல் மற்றும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கண்ட கோரிக்கைகளைநிறைவேற்றுவதன் மூலமே சாத்தியமாக்கலாம்

......

## விஸ்தரிக்க கோரிக்கை

உடுப்பிட்டி, சனி

தெல்லியடிப்பட்டினசபையின் தற்போதைய அலுவலகம் இடவசதியின்மையால் நெருக்கடி வாய்ந்ததாக விளங்குகின்றது ஆதலால் இப்பட்டினசபை அலுவலகத்தைத் திருத்திவிஸ்தரிக்க வேண்டுமென்று பட்டினசபை உபதலைவரும் முதலாம் வட்டார உறுப்பினருமான திரு. கே. ஐயாத்துரை பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். பி, தேவசகாயத்திடம் கேட்டுள்ளார்,

......

## தொழில் அமைச்சருக்கு மகஜர்

உடுப்பிட்டி, சனி

''யாழ். கனிஷ்டதொழில் நுட்பக்கல்லூரியில் சகல போதனையினங்களிலும் பயிற்சிபெற்று வெளியேறும் மாணவர்களுக்குத் தொழில் நுட்பக்கல்லூரி மூலமாக அரசாங்க இலாக்காக்களில் வேலை வாய்ப்பேற்படுத்திக் கொடுக்க வேண்டும்''

இவ்வாறு கோரும் மகஜரை வடமராட்சி வர்த்தக மாணவர் சங்க உபசெயலாளர் திரு கே பாலகிருஷ்ணன் தொழிலமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org